# மண்

இதழ் 167

2014

புரட்டாதி / ஐப்பசி
September / October

கல்வி கலை இலக்கிய
சமூக இருமாத இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg-Germany

**தொலைபேசி:** 0203/8073898

**தொலைநகல்:** 0203/8073898

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:**
Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

தேர்தல் என்பது ஜனநாயகப் பண்பில் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததும் அடிப்படையானதுமான ஒரு அம்சமாகக் கருதப்படுகின்றது. ஆட்சி பீடம் ஏறி, நாட்டை யார் வழிநடத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களுக்கு இந்தத் தேர்தல்கள் மட்டுமே வழங்குகின்றன. பல்வேறு கட்சிகளும் தங்கள் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் மக்கள் முன் வைக்கும் போது மக்கள் அவற்றைப் பரிசீலனை செய்து, நாட்டைப் பயனுள்ள முறையில் வழி நடத்தக் கூடிய வேட்பாளர்களை இனம்கண்டு, அவற்றைத் தமது வாக்குகள் மூலம் தெரிவு செய்யும் பொழதே ஜனநாயகம் முழுமை பெறுகிறது. ஆனால் தேர்தல்களில் சுதந்திரமான வாக்களிப்பு முறை இடம்பெறாத போது ஜனநாயகத்தின் ஆணிவேரே ஆட்டம் கண்டு விடுகிறது.

இலங்கையும் ஒரு ஜனநாயக நாடு என்றே கருதப்படுகிறது. பல்வேறு தேர்தல்களிலும் மக்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. எல்லா நாடுகளிலும் தேர்தல் , நீதித்துறை, பரீட்சை , சிறைச்சாலை என்பவற்றுக்கான ஆணையாளர்கள் சுதந்திரமாகவே இயங்கி வருகின்றனர். இதில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்ற மரபு ஜனநாயக நாடுகளில் மிக இறுக்கமாகவே பின்பற்றப்பட்டு வருகின்றது. இதுவே ஜனநாயகத்தின் உயிர்நாடியாக கருதப்படுகின்றது. ஆனால் 1978 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புக் சட்டமும், அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களும் ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகளையே கேள்விக்குட்படுத்தி விட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மூலம் ஆணைக்குழுக்கள், நீதிச்சேவை அகியவற்றின் சுதந்திரமான இயக்கம் வலுவிழந்து விட்டது. ஜனாதிபதியே இந்த ஆணையாளர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டவராயிருக்கின்றார். பதவி வழி வரும் ஆணையாளர்கள் அதிகாரத்தில் இருக்கும் போது அவர்கள் சுதந்திரமாக இயங்க முடியும். ஆனால் ஜனாதிபதி என்ற அரசியல்வாதியால் நியமிக்கப்படும் போது அவர்களின் சுதந்திரமான நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்ட மூலத்தை அங்கீகரிக்க மறுத்த. இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழேயே தேர்தல் ஆணையாளர் கூட செயற்பட வேண்டிய நிலை உள்ளது. கடந்த காலங்களில் தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக ஒவ்வொரு முறையும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களால் நா ற்றுக்கணக்கான முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டன. ஆனால் அவை தொடர்பாக இது வரை எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டதே கிடையாது. எனவே தேர்தல் முறைகேடுகளும் தேர்தலும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டவையாகிவிட்டன. அரச அதிகாரம், காடைத்தனம், வன்முறைகள் என்பன தாராளமாகவே தேர்தல் காலங்களில் அரங்கேற்றப்படுகின்றன. இவை தொடர்பான முறைப்பாடுகளை தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் எழுதி வைத்து வெறும் காகித அறிக்கை விடுமளவுக்கு மட்டுமே நிலைமை. எப்பிடியிருப்பினும் தேர்தல் வன்முறைகளும், அரச பணியாளர்கள், அரச வாகனங்கள் போன்ற வளங்களும் ஆளுங்கட்சிக்குச் சார்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதே உண்மை.

அதாவது மக்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களைச் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமை பல்வேறு வழிகளிலும் மக்களிடமிருந்து பறிக்கப்படுகின்றது. அதற்குத் தேர்தல் ஆணையாளர், பொலிஸார் ஆகிய தரப்பினர் மறைமுகமாகவும் நேரடியாகவும் துணை போய்க் கொண்டிருக்கின்றனர். ஏற்கனவே இடம்பெற்ற தேர்தல்களைப் போன்றே ஊவாமாகாணசபைத் தேர்தலிலும் ஜனநாயகம் தூக்கு மேடையில் ஏற்றப்பட்டு விட்டது என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும். மக்கள் தங்களுக்குரிய வேட்பாளர்களை சுதந்திரமான முறையில் தங்கள் விருப்பப்படி தெரிவு செய்வது ஏகாதிபத்திய முறை எனவும், இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு என்ற வகையில் தனக்கே உரித்தான முறையில் மக்களை நிர்ப்பந்தித்து வாக்களிக்க வைக்கும் வகையில் தேர்தலை நடத்துகிறது என ஆளுங்கட்சியினர் சர்வதேசத்துக்கு புதிய விளக்கம் கொடுத்தால் கூட ஆச்சரியப்பட முடியாது. அந்தளவுக்கு ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

– ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## வஞ்சகம் பேசேல்:-

மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு, வாயினால் அதற்கு நேர்மாறான ஒன்றைச் சொல்வது கபடமான செயலாகும். இதை வஞ்சகம் என்று கூறுவார்கள்.. நல்லவர்களைப் போல நடந்துகொண்டு கெடுதல் செய்வார்கள் சில கயவர்கள்.. இப்படி வஞ்சகமான செயல் புரிவோரை, கபடமாக நடந்துகொள்வோரை யாரும் மதிக்கமாட்டார்கள். நம்பமாட்டார்கள். உள்ளத்தில் என்ன நினைக்கிறோமோ அதன்படியே பேசவேண்டும். நடக்க வேண்டும். இத்தகையவர்களையே மக்கள் மதிப்பார்கள். நம்புவார்கள். இல்லாதவர்களை ஒதுக்கிவிடுவார்கள். ஆகவே பிறர் மதிக்கும்படி, நம்பும்படி நீ வாழவேண்டாமா!..அப்படி வாழ நீ வஞ்சகம் பேசக்கூடாது. இதையே வஞ்சகம் பேசேல் என்று அறிவுறுத்துகிறார் ஔவைப்பாட்டி.....

## அழகு அலாதன செய்யேல்:-

நீ பாடசாலையிலிருந்து வந்துகொண்டிருக்கிறாய். வழியில் ஒரு கைமணிக்கூடு கிடக்கிறது. அது விலைமதிப்புடையது. நீ அதை எடுக்கிறாய். நீ எடுத்ததை யாரும் பார்க்கவில்லை. அதை நீ உனதாக்கிக் கொள்ளலாம். ஆனால் அப்போது ஒரு பெரியவர் அங்குவந்து இங்கும்.. அங்கும் தேடுகிறார். தன் மணிக்கூடு தொலைந்துவிட்டது என்கிறார் இந்த நிலையில் நீ அதை அவரிடம் நீட்டுகிறாய். அவர் கவலைதோய்ந்த முகத்தில் களிப்பு மலருகிறது. உன் செயல் கண்ணியமானது, அழகானது, சிறப்பானது. மணிக்கூட்டைக் கொடுக்காமல் நீயே அதை வைத்துக்கொண்டிருப்பாயானால் அது இழிவான செயல் என்கிறது ஆத்திசூடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்குத் தந்த விளக்கம்!...

சீடன் ஒருவன் குருநாதரிடம் வந்து சுவாமி நான் கடவுளை எங்கே தேடவேண்டும்..கோவிலிலா, ஆச்சிரமத்திலா, வீட்டுப் பூசை அறையிலா..என்று கேட்டான். ஆனால் குரு பதில் எதுவும் கூறவில்லை. மறுநாள் இரவு நேரம் சற்றுத் தூரம் உலாவிவிட்டு வரலாமே என அச்சீடனை அழைத்துக்கொண்டு புறப்பட்டார் குரு.

அவர்கள் செல்லும் வழியில் ஒருவன் இருட்டில் வழி தெரிவதற்காக ஒரு லாந்தர் விளக்கை எடுத்துக்கொண்டு அங்கிருந்த வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டுவதைப் பார்த்தார்கள். வீட்டுக்காரன் கதவைத் திறந்து என்ன உனக்கு வேண்டும்....என்று கேட்டான். "இல்லை எனக்குப் புகைபிடிக்க வேண்டும் போல் உள்ளது என்னிடம் சுருட்டு இருக்கின்றது. ஆனால் தீப்பெட்டி இல்லை உங்களிடம் இருக்கிறதா" எனக்கேட்க வந்தேன் என்று கூறினான். உடனே அந்த வீட்டுக்காரன் சிரித்துக்கொண்டு "நீ கொண்டுவந்திருக்கும் லாந்தர் விளக்கிலேயே நெருப்பு இருக்கிறதே.. உன்னிடம் நெருப்பை வைத்துக்கொண்டு ஊரெங்கும் தேடி அலைகிறாயே" எனக்கேலி செய்தான்.

அந்த நிகழ்வைப் பார்த்த குரு தன் சீடனிடம் கூறினான் "நீ கேட்ட கேள்விக்குப் பதில் இதுதான்" "இறைவன் எம்முடன் என்றும் அழியாப் பொருளாய் விளங்குகின்றார். உள்ளே இருப்பவரை ஊரெங்கும் தேடி அலைவதை விடுத்து உனக்குள் மூழ்க நீ கற்றுக்கொண்டாய் என்றால்

கோவிலிலோ, ஆச்சிரமத்திலோ, பூசை அறையிலோ இறைவனைத்தேடி அலையத் தேவையில்லை" என்றார். சாதாரண ஒரு நிகழ்ச்சிகூட உயர்ந்த தத்துவத்தை விளக்குவதை அந்தச் சீடன் மட்டுமல்ல நாமும் புரிந்து கொள்வோம்!...

செல்விஇகீர்த்தன
றீத் மிஷன் - கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே பலம்.!..

ஒருநாள் காலையில் நானும் எனது நண்பர்களும் மாலை நேரத்தில் விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் பாடசாலையில் கல்வி கற்கும் வீதம் குறைவடைந்தது என்று கூறினார். பின்னர் எங்களை வகுப்பிற்கு வரச்சொன்னார். அப்போது காலையில் 7 மணியளவில் நாங்கள் அனைவரும் வகுப்பிற்குச் சென்றோம். வகுப்பால் திரும்பி வரும்போது சிறிதுதூரம் கதைத்துக்கொண்டே வந்தோம். கதைத்துக் கொண்டுவரும்வேளையில் பலத்த காற்று வீசியது. என்னுடன் வந்தவர்கள் அனைவரும் சென்றுவிட்டார்கள். அப்போது நான் மட்டும் தனியாக வந்துகொண்டிருந்தேன்.

நான் வழிதவறிக் காட்டுவழியே வந்துகொண்டிருந்த போது அந்தக் காட்டுக்குள் யாரோ நடமாடுவது போன்று இருந்தது. அருகில் சென்று பார்த்தேன் ஒரு குள்ளன் இருந்தான். அவனின் நகம் பெரிதாக வளைந்து காணப்பட்டது. அத்துடன் இன்னும் ஒருவன் மறைந்துகொண்டிருந்தான் யார்!.. என்று கேள்வி எழுப்பினேன். நாங்கள் இருவரும் நண்பர்கள் எனக் கூறினான். கேட்டுவிட்டு நான் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தேன். அப்போது இவர்களைப் போன்ற வேறு மாற்றங்களையுடைய குள்ளர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இந்த இரு குள்ளர்களும் அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களைப் பறித்து அவர்களுக்கு அடித்தார்கள். கூட்டமாகவந்த குள்ளர்கள் யாவரும் அடி வேண்டிய பயத்தால் ஓடிவிட்டனர். இவர்கள் இருவரும் ஒற்றுமையாகத் துணிந்து செயற்பட்டபடியால் ஒரு கூட்டத்தினரையே புறமுதுகு ஓடச்செய்தனரே..ஆகவே நாம் எந்தக்காரியத்தையும் ஒற்றுமையோடு துணிந்து செயற்பட்டால் வெற்றிபெற்றுவிடலாம் என்பதை இக்கதை உணர்த்துகின்றதல்லவா!...

செல்வன் துஸ்வேந்தன்
மாணிக்கவாசகம்

திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசுங்கள்!...

தாயிடம் அன்பாகப் பேசுங்கள்
தந்தையிடம் பண்பாகப் பேசுங்கள்

ஆசிரியரிடம் அடக்கமாகப் பேசுங்கள்
துணைவியிடம் உண்மையாகப்
பேசுங்கள்

சகோதரனிடம் அளவாகப் பேசுங்கள்
சகோதரியிடம் பாசத்தோடு பேசுங்கள்

குழந்தையிடம் ஆர்வமாகப் பேசுங்கள்
உறவினரிடம் பரிவோடு பேசுங்கள்

நட்புக்களிடம் உரிமையோடு பேசுங்கள்
அதிகாரிகளிடம் பணிவாகப் பேசுங்கள்

வியாபாரியிடம் கறாராகப் பேசுங்கள்
வாடிக்கையாளரிடம் நேர்மையாகப்
பேசுங்கள்

தொழிலாளர்களிடம் நேயத்துடன்
பேசுங்கள்
இறைவனிடம் மௌனமாகப்
பேசுங்கள்

ஏழைகளிடம் ஆதரவாகப் பேசுங்கள்
இயலாதவர்களிடம் உறுதிபடப்
பேசுங்கள்

பேசுவதற்குமுன் யோசித்துப்
பேசுங்கள்!...

## செல்லப்பாப்பா!..

செல்லக் கண்ணே சின்னப்பாப்பா
சேர்ந்து பாடு நல்லபாப்பா
செந்தமிழில் பா இசைப்போம்
நல்ல சின்னப் பாப்பா!..

நல்ல தமிழ் பா இசைத்தால்
சின்னப் பாப்பா உன்
நாவில் இன்பத்தமிழ் வளரும்
செல்லக் குட்டிப் பாப்பா!...

நாவில் தமிழ் வளர்ந்தால்
சின்னப் பாப்பா நீ
காலமெல்லாம் தமிழ்
வளர்ப்பாய் செல்லப்பாப்பா!...

காவலன் போல் பூ உலகில்
சின்னப் பாப்பா நீ
நன்றாய் தமிழ் வளர்ப்பாய்
எங்கள் செல்லப் பாப்பா!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சாதனை படைத்த மாணவி!...

பதினான்கு வயதே நிரம்பிய விசாலினி, தன் வயதுக்கே உரிய உற்சாகத்துடன் தோழிகளோடு தெருவில் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருக்கிறார். தென்னிந்தியாவின் ஆக்ஸ்: போர்ட் எனச் சொல்லப்படும் பாளையங்கோட்டையில் உள்ள சங்கர் நகரில் இருக்கிறது விசாலினியின் வீடு. இந்தச் சிறுமியின் சாதனைகளை அறிந்தால் ஆச்சரியத்தில் வாய்பிளந்து நிற்பீர்கள்.

இவர் ஐந்து சாதனைகள் செய்திருக்கிறார். அதில் ஒன்று உலக சாதனை. அதென்ன? ஐ.க்யூ எனும் (IQ- Intelligent Quotient) நுண்ணறிவுத் திறன் சோதனையில் உலகிலேயே அதிக ஐ.க்யூ அளவாக 225 புள்ளிகள் பெற்று விசாலினி சாதித்துக் காட்டியிருக்கிறார்.

உலக அளவிலான ஐ.க்யூ வில் கின்னஸ் சாதனை படைத்திருப்பவர் கிம் யுங் யோங் (Kim Ung-Yong) என்ற சீனர். இவரது ஐ.க்யூ அளவு 210. அதைக் கடந்த ஆண்டு, ஐ.க்யூ. நிபுணர்கள் மத்தியில் நடத்தப்பட்ட பல கட்ட பரிசோதனைத் தேர்வுகளில் முறியடித்து, 225 என்ற அளவை எட்டிப்பிடித்திருக்கிறார்.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் விசாலினியின் பெயர் இடம்பெற வில்லை. பதினான்கு வயது நிறைவடைந்தால்தான் கின்னஸ் புத்தகத்தில் இவரது சாதனை இடம்பெற முடியும். இதனால் தற்போது கின்னஸ் சாதனைக்கு விண்ணப்பித்துவிட்டுக் காத்திருக்கிறார்.

போதிய ஊடக கவனம் கிடைக்காமல் இருக்கிறார் இந்த அறிவுச்சுடர். மைக்ரோ சாப்ட் நிறுவனத்தை உருவாக்கிய பில் கேட்ஸின் ஐ.க்யூ. திறன் 160 தான், உலக செஸ் சாம்பியன் பாலி பிஸ்சரின் ஐ.க்யூ திறன் 180 தான் எனில் விசாலினியின் 225ஐ ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

விசாலினியின் சாதனைகள் பத்து வயதிலேயே தொடங்கி விட்டன. பாகிஸ்தானில் உள்ள பன்னிரண்டு வயது மாணவர் இரிடிசா ஹைதரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையைப் பத்து வயதில் முறியடித்து THE YOUNGEST CCNA WORLD RECORD HOLDER என்ற உலக சாதனை படைத்துள்ளார்.

பதினான்கு வயதிற்குள் பள்ளிப் படிப்பிலும் இருமுறை டபுள் புரமோஷன் வாங்கியிருக்கும் இவள் படிப்பது பாளையங்கோட்டையில் உள்ள லட்சுமி ராமன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில். கடந்த ஆண்டு மங்கழூரில் நடைபெற்ற NITஆல் நடைபெற்ற அனைத்துலக மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டு, பன்னாட்டு அறிஞர்களோடு கணினியில் நெட் வேர்க்கிங் தொழில்நுட்பம் குறித்து உரையாடினாள்.

விசாலினியின் அறிவுத்திறன் கண்டு வியப்புற்ற அவர்கள், நெட் வேர்க்கிங் தொழில்நுட்பத்தில் இவளுக்கு முனைவர் பட்டம் வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளனர். இதுவரை இதேபோன்ற ஏழ உலக தகவல் தொழில்நுட்ப மாநாடுகளுக்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டு "கீ ஸ்பீச்" கொடுத்திருக்கிறாள்.

சமீபத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அழைப்பை ஏற்று, அந்த வங்கியின் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் கவுரவப் பேராசிரியராகக் கலந்து கொண்டு "கான்செப்ட் ஆ∴ப் நெட் ஒர்க்கிங் அண்ட் க்ளவுட் கம்யூட்டிங்" என்ற தலைப்பில் 2 மணி நேர விரிவுரையாற்றி வியக்க வைத்திருக்கிறார்.இத்தனை சாதனைகள் படைத்துள்ள இவர் ஒருவயது வரை ஒரு வார்த்தை கூட பேச முடியாமல் சிரமப்பட்டிருக்கிறாள்.

(தொடர்ச்சி மறுபக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலினியின் தாய் திருமதி. சேதுராகமாலிகா, குழந்தை மருத்துவர் அளித்த ஆலோசனையின்படி, அவளுடன் இடைவிடாமல் பேசி, கதைகள் சொல்லி, ஸ்லோகங்கள் பாடிக் காட்டி விசாலினியின் பேசும் திறனை வளர்த்திருக்கிறார். இன்று விசாலினியின் நுண்ணறிவுத் திறனைக் கண்டு அறிஞர்கள் உலகம் வியந்துகொண்டிருக்கிறது. இந்தச் சாதனைச் சிறுமியின் தந்தை கல்யாண குமாரசாமி ஒரு எலக்ட்ரிஷியன். இதுவரை விசாலினி தேர்வுகளில் 90 சதவிகித மதிப்பெண்கள் பெற்று ஆச்சரியப்படுத்தியிருக்கிறார். தனக்கான இணைய தளத்தையும் தனது மடிக்கணினி கொண்டு தானே வடிவமைத்திருக்கிறார். இவர் சாதனைகள் இப்போதைக்கு நிற்காது என்பது மட்டும் நிச்சயம்.

# இந்தியாவில்!...

- இந்தியாவில் கடந்த 4 வருடங்களில் 40 லட்சம்பேர் புற்றுநோயால் இறந்திருப்பதாகப் புள்ளிவிபரம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

- இந்தியாவின் 4வது பெரிய நகரமான சென்னை நகரம் (பழையபெயர் மட்ராஸ்) ஆரம்பிக்கப்பட்டு 375 வருட நிறைவைக் கொண்டாடியுள்ளது.

- இந்தியாவில் மாறி..மாறி ஆட்சிபீடம் ஏறும் அரசுகளின் தவறான பொருளாதார கொள்கைகளால் வறுமை, கடன் சுமைகளால் இதுவரை சுமார் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருப்பதாக ஆய்வு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

- இந்தியா உத்தரப்பிரதேசத்தில் விநாயகர் சதுர்த்திதினம் கொண்டாடப் பட்டபொழுது அங்குவாழும் இஸ்லாமிய மக்களும் பெருமளவில் கூடித் தாங்களும் பிள்ளையார் சிலையை நிறுவி பூசை செய்து நீர் நிலைகளில் கரைத்துக் கொண்டாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத்துளிகள்!...

சோம்பலைத் தடுக்கவேண்டுமானால் அதிகமாக உண்பதைத் தவிர்க்க வேண்டும்.

கற்றுக்கொள்ளப் பொறுமையுடையவர்கள்தான் கற்றுக்கொடுக்கும் திறமையடையவர்கள்.

ஒழுக்கம் என்பது ஓய்வுநேர விளையாட்டல்ல சிறந்த வாழ்வின் சித்திரமாகும்.

திறமை என்பது திட்டம்போட்டு மறைப்பதல்ல தீர்வு காணும் மட்டும் துடிப்பது.

நேர்மையாக முயன்றுகொண்டிருந்தால் நிட்சயம் நிறைவில் வெற்றி கிடைக்கும்.

நிலத்தை நம்பி வாழலாம் நிழலை நம்பி வாழக்கூடாது.

அளவுக்கு அதிகமான ஆசை அழிவுக்கு வழிகோலிவிடும்.

படித்துச் சுவைத்தவர்செல்வி. வி. புனிதா
றீத் மிஷன் – கிளிநொச்சி.

# திமிங்கிலம்

கடல்வாழ் உயிரினங்களில் மிகவும் பெரியது திமிங்கிலமாகும். இதன் எடை 150 தொன்வரை காணப்படும். நீளம் 100 - 120 அடிவரை காணப்படும். இது எழுப்பும் ஒலியானது சுமார் 1.600 கிலோமீட்டர் தூரம்வரை கேட்கும். இந்த உயிரினத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. இது விலங்கினத்தைச் சேர்ந்தது. இதன் குட்டி 8 தொன்வரை காணப்படும். சுமார் ஏழ கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த இனம் மணிக்குச் சுமார் 20-25 மைல் தூரம் ஓடும். இதற்குப் புறச்செவி கிடையாது. மீனைப்போல் குட்டிபோட்டுப் பால் ஊட்டுகின்றது. இதன் நாக்கின் எடையே சுமார் 2-3 தொன்வரைகாணப்படும். இதன் ஆயுட்காலம் 100 ஆண்டுகள்வரை காணப் படும்...

செல்வி கி. கிருபாஜினி
றீத் மிஷன் – கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி முடிவு- 156
## (ஆடி - ஆவணி 2014)

1. இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கும் மதப்பிரிவினரின் பெயர்களை எழுதுக..
பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்த்தவர்கள்.

2. வடகிழக்கு மகாகணத்திலுள்ள கடற்கரைகரையோரங்களில் அமைந்துள்ள எட்டு ஊர்களின் பெயர்களை எழுதுக..
காங்கேசன்துறை, பலாலி, மன்னார்,, திருகோணமலை
முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று.

3. இலங்கையில் புகழ்பெற்ற வெந்நீர் ஊற்றுக்கள் எந்த இடத்தில் அமைந்துள்ளது. இது எந்த மாவட்டத்தில் அமைத்துள்ளது.
கன்னியா - திருகோணமலை மாவட்டம்.

4. கடந்த 13-07-2014 அன்று நடந்து முடிந்த உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற நாட்டின் பெயர் என்ன. இது எந்தக்கண்டத்தில் அமைந்துள்ளது. இந்த நாட்டின் தலைநகரம் எது.
ஜேர்மனி - ஐரோப்பா - பேர்ளின்

5. பிரித்தெழுதுதல்...... சேர்த்தெழுதுதல்........

| | | | |
|---|---|---|---|
| காற்றோட்டம் | காற்று+ ஓட்டம் | நாள்+காட்டி | நாட்காட்டி |
| தரைவிரிப்பு | தரை +விரிப்பு | சமையல்+அறை | சமையலறை |
| பழச்சாறு | பழம்+ சாறு | வெள்ளி+கிழமை | வெள்ளிக்கிழமை |
| கடற்காற்று | கடல் +காற்று | நிலம்+சரிவு | நிலச்சரிவு |
| மரக்கிளை | மரம்+ கிளை | வாசல்+படி | வாசல்படி |

6. ஒரு பொருள் பல சொற்கள் எழுதுக..

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்:- அம்மா | - தாய் | - மாதா | - அன்னை |
| அப்பா | - பிதா | - தந்தை | - தகப்பன் |
| கடவுள் | - இறைவன் | - ஆண்டவன் | - ஈசன் |
| சூரியன் | - ஆதவன் | - கதிரவன் | - பகலவன் |
| அரசன் | - கோன் | - மன்னன் | - வேந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி -157
## (புரட்டாதி - ஐப்பசி 2014)

1. இலங்கை வடகிழக்கு மாகாணத்தில் பின்வரும் தொழில்கள் நடைபெறும் ஊர்களின் பெயர்களை எழுதுக..

நெல் விவசாயம்----------------- உப்புச் செய்கை----------------
மீன்பிடித்தல் ----------------- தானியம் மரக்கறி--------------

2. இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் சென்றுவரும் நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக..

------------------------- --------------------
------------------------- --------------------

3. ஐரோப்பாவில் டொச் மொழி பேசப்படும் 3 நாடுகளின் பெயர்களை எழுதுக.

---------------- -------------- ---------------

4. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் யூரோ பணப்புழக்கம் இல்லாத நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக...

------------------------- ------------------
------------------------- ------------------

5. ஒத்தசொற்கள் எதிர்ச்சொற்கள் எழுதுக...

அம்மா----------- இருட்டு-----------
உண்மை---------- தோற்றம்----------
வீடு ------------ காலை -----------
ஆடை ----------- பகல் ------------
உணவு ----------- குளிர் ------------

6. ஐந்து எழுத்துச் சொற்கள் ஆறு எழுதுக...

-------------- ------------- ------------
-------------- ------------- ------------

7. நீங்கள் விரும்பிய திருக்குறள் ஒன்றையும் அதன் பொருளையும் எழுதுக....

முடிவு திகதி 31.10.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு -83
## (ஆடி - ஆவணி 2014)

| | | | |
|---|---|---|---|
| சு | ந் | று | லா |
| த் | று | ந் | ப |
| த | ல் | கா | க |
| ம் | ர | பா | ல் |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 84
## (புரட்டாதி - ஐப்பசி 2014)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ:-

01-03 உலகின் அகிம்சைக்கு வழிகாட்டிய அன்னை

03-04 வீதிகளை இப்படியும் அழைக்கலாம்

வ-இ:-

12-10 நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம்

16-14 தமிழர் பிரதேசத்தில் வறண்டபிரதேசம் என்று கூறலாம்

கீ-மே:-

11-07 உடல் உறுப்புக்களில் ஒன்று

12-04 பூக்களில் ஒன்று

மே-கீ:-

01-13 சந்திரனுக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

06-10 பொருட்கள் வேண்டும்போது அதன் தரத்துடன் இதையும் பார்க்க வேண்டும்.

முடிவு திகதி: 31.10.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போட்டி முடிவுகள்
## (ஆடி - ஆவணி 2014)

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

செல்வி. நந்தனா.கனகராசா - Monchengladbach
செல்வி. சாதனா.தேவானந்தராசா - Monchebgladbach
செல்வி. துசயந்தி.முருகானந்தம் - Kilinochchi
செல்வி. மு.நிசா - Kilinochchi
செல்வி. சகானா.சந்தோஷ் - Kilinochchi
செல்வி. விதுசா. குணசீலன் - Swiss
செல்வி. சிந்துஜா. செல்வகுமார் - Holland

செல்வன். காந்தன்.கந்தசாமி - Frankfurt
செல்வன். தினேஷ்.செல்வகுமார் - Swiss
செல்வன். எம்.யதுர்ஷன் - Kilinochchi
செல்வன். ராகுல்.கனகராசா - Monchengladbach
செல்வன். சியாமளன்.நீதிராசா - Berlin

பரிசுபெறும் அதிஸ்டசாலிகள்.

செல்வி. விதுசா குணசீலன் - Swiss
செல்வி. சிந்துஜா செல்வகுமார் - Holland
செல்வன். சியாமளன் நீதிராசா - Berlin

போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..

---

நன்றிகள் !.

மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு
செல்வன் பானுஸ்கந்தா-புவனேந்திரன்- Duisburg
மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன் சிவகாந்த்-சிவராசா - Duisburg

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை- டோட்முண்ட்-ஜேர்மனி

## திருக்குறள் மனனப் போட்டி-2014

திருக்குறள், மனித வாழ்விற்கு வழிகாட்டும் உலகப் பொதுமறை. தமிழர் வாழ்வின் இலக்கணம் திருக்குறள். பெரும் சிறப்புவாய்ந்த திருக்குறளை, நம் பிள்ளைகள் அறிந்தும்,படித்தும் பயனடைய வழிகாட்டும நோக்கில் நடாத்தப்படும் போட்டியே, திருக்குறள் மனனப் போட்டியாகும். இப்போட்டியில் பிள்ளைகளைப் பங்குகொள்ளச் செய்து, திருக்குறள்வழி வாழ வைப்பதற்கும், தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பெற்றோர்களும், பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு பிரிவில் பங்குபற்றும் பிள்ளைகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும். பங்குபற்றிய யாவருக்கும் பதக்கங்கள் வழங்கப்படும்.போட்டிகள் 2014.11.08 ந் திகதி டோட்முண்ட் நகரத்தில் நடைபெறும். இடம், நேரம் பின்பு அறியத்தரப்படும்.முடிவுகள் யாவும் அத்தினமே அறிவிக்கப்பட்டு பரிசுகளும், பதக்கங்களும்வழங்கப்படும். விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி போட்டிக்கான அனுமதிக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். ( ஒருவருக்கான கட்டணம் 10,-ஒயிரோ. குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக் கூடுதலானவர்கள் பங்குபற்றும்போது, முதலாவது விண்ணப்பத்தாரர் தவிர்ந்த மற்றவர்களுக்கு முறையே 5.-ஒயிரோ.) போட்டிக்கான விபரங்களையும், விதிமுறைகளையும் நன்கு கவனித்து கொள்க.பிரிவுகளுக்கான வயதுக்கணிப்பை, போட்டியின்போது உறுதிப்படுத்த வேண்டும். அந்தந்தப் பிரிவுகளுக்குரிய குறட்பாக்களையே மனனம் செய்தல் வேண்டும்.விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2014.10.11ந் திகதிக்கு முன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**Valluvar Tamilische Schule Postfach 1646, 59159 Kamen.**
பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:
**Ponnuthurai Srijeevaghan Konto Nr: 5405356143**
**Bankleitzahl: 500 105 17 Bank: ING-DiBa AG, Frankfurt am Main**
**Verwendungszweck: Thirukkural Pooddy**
மேலதிக விபரங்களுக்கு 02307-299384
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை -டோட்மூண்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட்
## திருக்குறள் மனனப் போட்டி - 2014

விபரங்கள்:

| வயது | விடயம் - திருக்குறள் |
|---|---|
| கீழ்ப்பிரிவு<br><br>6 வயது தொடக்கம்<br>7 வயது வரை | முதலாம் (1) அதிகாரமான **கடவுள் வாழ்த்து** என்ற அதிகாரத் திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.<br>குறளிலக்கம்:- 1 - 2 - 3 - 4 - 5. |
| கீழ்ப்பிரிவு கடைநிலை<br><br>8 வயது தொடக்கம்<br>9 வயது வரை | எட்டாம் (8) அதிகாரமான **அன்புடைமை** என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஏழு குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.<br>குறளிலக்கம்:- 71 - 72 - 73 - 74 - 75 - 76 - 77 |
| மத்தியபிரிவு<br><br>10 வயது தொடக்கம்<br>11 வயது வரை | பதினான்காம் (14) அதிகாரமான **ஒழுக்கமுடைமை** என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து கூறுதல்.<br>குறளிலக்கம்:- 131 - 132 - 133 - 134 - 135 - 136 - 137 - 138 - 139 - 140. |
| மத்தியபிரிவு கடைநிலை<br><br>12 வயது தொடக்கம்<br>13 வயது வரை | முப்பதாம் (30) அதிகாரமான **வாய்மை** என்ற அதிகாரத்திலிருந்து ஏழு குறட்பாக்களை மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.<br>குறளிலக்கம்:- 291 - 292 - 293 - 294 - 295 - 296 - 297. |
| மேற்பிரிவு<br><br>14 வயது தொடக்கம்<br>15 வயது வரை | நாற்பத்திரண்டாம் (42) அதிகாரமான **கேள்வி** என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.<br>குறளிலக்கம்:- 411 - 412 - 413 - 414 - 415 - 416 - 417 418 - 419 - 420. |
| மேற்பிரிவு கடைநிலை<br><br>16 வயது தொடக்கம்<br>17 வயது வரை | அறுபதாம் (60) அதிகாரமான **ஊக்கமுடைமை** என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.<br>குறளிலக்கம்:- 591 - 592 - 593 - 594 - 595 - 596 - 597 598 - 599 - 600. |
| அதிமேற்பிரிவு<br><br>18 வயதுக்குமேல் | தொண்ணூற்றாறாம் (96) அதிகாரமான **குடிமை** என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களை மனனம் செய்து பொருளுடன் கூறுவதுடன், தொண்ணூற்றேழாம் (97) அதிகாரமான **மானம்** என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.<br>குறளிலக்கம்:- 951 - 952 - 953 - 954 - 955 - 956 - 957 - 958 - 959 - 960. (பொருளுடன் கூறுதல்)<br><br>961 - 962 - 963 - 964 - 965. (குறள் மட்டும் கூறுதல் ) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வேண்டுகோள்!.

மண் சஞ்சசிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம் .மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல், சிந்தனையாற்றல், அறிவியல் விடையங்களில் மேம்படவேண்டும் என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்கு நீங்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்து நடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும் மாணவமணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும் மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும். ஆகவே பெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிப் பயன்படும்வண்ணம் அன்போடு கேட்டுககொள்கின்றோம்!..

ஆசிரியர்

## வெள்ளி விழா!.

உங்கள் மண் சஞ்சிகை எதிர்வரும் 2015 தை மாதம் தனது 25வது ஆண்டை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளது. வெள்ளி விழாவையொட்டி சிறுவர் இளையோர், வாசகர்களிடையே பல வகையான போட்டிகள் இம்மலரிலே வெளியாகியுள்ளன. போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள். தொடர்ந்து மண் சஞ்சிகையைப் படியுங்கள். இவ்விழா பற்றிய உங்கள் கருத்துக்களை அன்போடு எதிர்பார்க்கிறோம்!...

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்!...

1. ஒரு நாள் கோபம் பல நாட்களுக்குத் துக்கத்தைத் தரும்.

2. உழைப்புக்கு என்றும் மரியாதை உண்டு.

3. வீழ்வதால் வெட்கப்படாதே...வீழ்ந்து எழுவதில்தான் வெற்றி பெறுவாய்.

4. படித்தவனிடம் பக்குவம் பேசாதே..பசித்தவனிடம் தத்துவம் பேசாதே.

5. மகான் போல வாழவேண்டுமல்ல...மனச்சாட்சிப்படி வாழ்ந்தால் போதும்.

6. வாய்ப்பு ஒருமுறைதான் வரும்..இனிய வாழ்வைத்தேடி நாம்தான் செல்லவேண்டும்.

7. பகைவனையும் நண்பனாகக் கருது. பண்பானால்தான் உலகை வசப்படுத்தமுடியும்.

8. ஆசைகள் வளர..வளர மனிதனின் தேவைகளும் வளர்ந்துகொண்டே செல்லும்.

7. எவ்வளவு குறைவாகப் பேசமுடியுமோ அவ்வளவு கறைவாகப் பேசு.

8. மரண பயம் வாழ்வைக் குறைத்துவிடும் இது உண்மை.

9. கோபத்தில் வெளிவரும் வார்த்தைகள் அர்த்தமற்றவையாகப் போய்விடும்

10. நாம் அகிகம் வீணாக்கிய நாட்களில் நாம் சிரிக்காத நாட்கள்தான் அதிகம்.

11. விடியும் என்று வானத்தை நம்பு.. நீ முடியும் என்று உன்னையும் நீ நம்பு.

12. மகிழ்ச்சிக்குரிய பரிசு பல போராட்டத்தின் பின்புதான் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

111. தகுதி எனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

112. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

113. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

114. தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல செஞ்சத்துக்
கோடமை சான்றோர்க் கணி.

116. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

117. கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபொற் செயின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

111. பகைவர், அயலார், நண்பர் என்று பார்க்காமல் நடுநிலைமையில் இருந்து வழுவாமல் நடப்பதே அறச்செயலாருக்குத் தகுதியாகும்.

112. நடுநிலைமை உடையவன் பெற்ற செல்வம் அழிவில்லாமல் அவனுடைய பின் சந்ததியாருக்கும் பாதுகாப்பாய் இருக்கும்.

113. நன்மையே நமக்குக் கிடைப்பதாக இருந்தாலும், தீய வழியில் வரும் செல்வத்தால் உண்டாகும் பயனை அப்பொழதே விட்டுவிட வேண்டும்.

114. ஒருவர் நடுநிலைமை உடையவர் , நடுநிலைமை அற்றவர் என்பது அவரவரின் மக்களின் செய்கையால் அறியப்படும்.

115. இன்ப, துன்பம் நல்வினை, தீவினையால் வருவது இயல்பே. அவற்றுள் ஒன்று தம்மை வந்து அடைந்த காலத்திலும், நடுவுநிலைமையிலிருந்து மாறாது நடப்பதே சான்றோருக்கு அழகாகும்.

116. நம் நெஞ்சம் நடு நிலைமையிலிருந்து நீங்கித் தீமை செய்ய நினைக்கும் பொழதே "நாம் கேட்டோம்" என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

117. நடுநிலைமையுடன் அறமாகிய நன்னடத்தையைப் போற்றி நடப்பவனின் வறுமையை உலக மக்கள் கெடுதலாக எண்ணமாட்டார்கள்.

118. துலாக்கோல் பொருளை வரையறுப்பது போலப் பகை, நட்பைப் பார்க்காமல் நடு நிலைமையில் நீதி வழங்குவதே சான்றோர்க்கு அழகு.

119. மனதினுள் வஞ்சகம் இல்லாதிருந்தால் சொல்லிலும், செயலிலும் வஞ்சகம் இல்லாதிருக்கும் என்பதே நடுநிலைமையின் சிறப்பாகும

120. பொருளை வாங்கி விற்கும் நிலைகளில் வணிகர்கள் பிறர் பொருள்களையும் தம் பொருள்கள் போல எண்ணி, மிகையும், குறையும் இல்லாமல் வர்த்தகம் செய்வதே வாணிகச் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையா!...

திருமதி. கெங்காஸ்ரான்லி
ஜேர்மனி.

அழகான பொய்கையது
அழகுடன் பூக்கள் பூத்திருந்தது
பலவகையான மலர்கள்,
பலவர்ணங்கள் செடிகள்.
இந்த உலகத்தில் மனிதர்கள்,
வந்த மரபு தொடர்கள்
வித்தியாசமான குணங்கள்,
இத்தியாதியான் செயல்கள்.
ஐந்து விரலும் ஒரு மாதிரியல்ல
ஒரு அன்னை பெற்ற பிள்ளைகள் ஒரே மாதிரியல்ல
இது இயற்கையின் இயல்பு
இயல்பு திரிபட்டாலும் இயற்கை திரிபடக்கூடாது.
மனம் ஒரு குரங்கு,
மறுபடி மறுபடி மரம் தாவும்
தாவும் மனத்தை தடுக்க,
தாண்டவக்கோனின் தடி உதவும்
அவன் தாள் பணிந்தால்,
அனைத்தும் வெற்றியே
ஆண்டவன் படைப்பின்,
அற்புத சக்திகள்,
அலைபாயும் கடலில்
ஆழ்ந்த முத்துக்கள்
சிலையாகிப் போன
தெய்வ சக்திகள்
விலையாகிப்போகும்
தெய்வ விக்கிரகங்கள்,
கிரகங்கள் செயலால்,
தவித்த உயிர்கள்,
உயிர் வாழ செழித்த பயிர்கள்
மழை புயலால் அழிந்த பயிர்கள்
அறாத்துயரில் இடிந்த மனங்கள்
அழகான இயற்கை வளங்கள்,அனர்த்தம் இன்றி புனல்கள்,
புனருத்தாரனம் செய்கையில்.அழிக்காது இயற்கை
காத்தல் இயற்கை இருந்தால் தான் இன்னலின்றி வாழமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதும்!...

வேர்களின்
நம்பிக்கையில் இறுமாப்புடன்
நிற்கும்...புயல்
வந்து மோதினாலும்
வெற்றிவீரனாகவே சாயும்..
நாணல்
மரத்தைப் பார்த்தே கிண்டலடிக்கும்..
தன்னைப்போல்
இரு...
வாழலாம்...
பூக்கள்
வண்டுடன் காமுற்ற
போதையில்
கிடக்கும்..
இலைகள் யாராவது
உரசமாட்டார்களா
என்று சிலிர்த்து
நிற்கும்...
சருகாவதற்குள்
வாழ்வை
அனுபவித்துவிடும் துடிப்பு...
மரம்
தன்னில்
முளைத்தவற்றைப் பார்த்து
சிரித்துக் கொண்டாலும்
மௌனமாகவே
நிற்கும்..கம்பீரமாக..
இலைகளும்..பூக்களும்
விசுவாசமாகவே
இருக்கும்
என்கிற
நம்பிக்கையில்
குருவிச்சை
ஒட்டி
முளைத்ததை
அறியாமாலேயே வளர்ந்தது.
பூக்களின்
காமம்,
இலைகள்
குருவிச்சையுடனான
உரசல்..
மரத்தை
வெட்டிச் சாய்க்க
சரிந்து வீழ்ந்தது...
வேர்கள்
மட்டும் கவலைப்படாதே...
இதுதான் வாழ்க்கை...
நானிருக்கிறேன்..
என்னிலிருந்து
புதிதாய்
வீச்சுடன் மரம்
முளைக்கும் என்றது....

முல்லைஅமுதன்
பிரித்தானியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவி மனிதா பாரடா.!...

இரவு பகலாய் ஓடுகின்றாய்
பணத்தை தேடியே அலைகின்றாய்
நேரம் இல்லா வாழ்க்கை என்று
நித்தமும் நீயே கூறுகின்றாய்
பாசத்தை உணரா மனதாலே
காசை மட்டும் நினைக்கின்றாய்
பாவங்கள் பலதும் செய்கின்றாய்
பாதை மாறியும் போகின்றாய்
மது, மாது, சூது என்று பணத்தை
தீய வழியில் செலவு செய்வாய்
ஆடுகள் வெட்டிக் கொண்டாட்டம்
ஆடை அணிகலன் புது மாற்றம்
வீடு வாகனம் என்று அடுத்தவற்கு
காட்டும் முன்னேற்றம்
சிலர் கல்வி அறிவே சேராமலே
காட்டும் டம்பமோ பெரும் ஆட்டம்
பசித்தவனுக்கு அன்னம் இடாமல்
தாகத்துக்கும் தண்ணி கொடாமல்
ஏழைகளுக்கு உதவாமல்
அனாதைகளுக்கு கை கொடாமல்
ஒய்வு இன்றி நீ சேர்த்த செல்வம்
கூட வருமா இறுதியிலே?
மானம் காக்க ஏழைகளுக்கு ஒரு
கொடி துணியும் தானம் செய்யாமல்
கோயில்கள் தோறும் பூசை
செய்வாய் இன்னும் கோடி
பணம் சேர என்று பாவி மனிதா
நீ புவியில் பணத்தை மட்டும்
சேர்க்கவில்லை பாவத்தை மூட்டை
கட்டுகின்றாய் போகும் வழிக்கு நீ
பாவ மூட்டையை சுமக்கின்றாய்
நாடி நரம்புகள் தளர்ந்த பின்னே
நீ நாதியற்று கிடக்கின்றாய்
பணத்தை தேட முடிந்த உன்னால்
மனதில் நிம்மதியைத் தேட
முடிவதில்லை பாரெங்கும் நீ
போகிலும் பணம் பாதாளம் மட்டும்
பாயிலும் காதற்ற ஊசியும் வாராது
காண் கடை வழிக்கே என்று
பட்டினத்தார் கண்ட ஓலையில்
இறைவன் எழுதி சென்றதை
நீயும் மறவாதே மானிடா
பாவி மனிதா கேளடா
பணத்தாசை போதும் மாறடா

கவி மீனா
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனை!...

திடீரெனத் தோன்றி
விரைவாக மறைந்துவிடும்!..

காலம்!..
எம்மை அறியாமலே அது ஓடுகிறது
ஏனெனில் நாம்தான் அதைப்
பயன் செய்ய மறந்துவிடுகிறோம்
சென்ற காலம் திரும்பி வருவதில்லை
எனவே நாம் தான்
அதைப் பயனுள்ளதாக்க வேண்டும்!...

கல்வி!..
எனக்குள்ளே மனம்
மனதுக்குள்ளே ஆசை
ஆசைக்குள்ளே கனவு
கனவுக்குள்ளே கல்வி!...

ஒப்பீடு!..
வாழ்க்கையிலிருந்து
சினிமாவை எடுக்கலாம்
ஆனால் சினிமாவிலிருந்து
வாழ்கையை எடுக்காதே!...

நோய்!...
அதை அனுபவிப்பவருக்குத்தான்
அதன் வலி புரியும்!...

செல்வி சாதனா தேவானந்தராசா
அகவை – 13
ஜேர்மனி.

## தாயை!...

தாயின் கருவறையில்
மீண்டும் ஒருமுறை நான்
அறியும் அறிவுடனே
அடைபட வேண்டுகிறேன்!..

சிசுவின் உயிர்த்துடிப்பை
உணர்வால் உணர்வதற்கு
தாயே உனைப்போலும்
நான்மாற வேண்டுகிறேன்!...

சத்தமில்லா நித்திலத்தில்
நித்தமும் சுற்றிவர
இறைவா உனை நானும்
தாள்பணிந்து வேண்டுகிறேன்!..

சொர்க்கம் ஒன்றிருந்தால்
சற்றே சென்று உலாவி
மீண்டும் உன்னிடத்தில்
சாகும்வரை வேண்டுகிறேன்!...

கட்புலன் அற்றவரின்
கனவற்ற உலகமதை
ஒரு முறை நான் காண
பலமுறை வேண்டுகிறேன்!...

ஏழைகள் யாருமில்லா
ஏழேழ உலகங்களை
சிருஷ்டிக்கும் சக்திபெற
வரம் ஒன்றை வேண்டுகிறேன்!...

செல்வன் சுகிர்தரன் கஜன்.
திருஞானசம்பந்தர் குருகுலம் –
களுதாவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே வரம் தருவாய்!...

அன்னையே நீ எனக்கு நிலாக் காட்டி
சோறு ஊட்டி உதிரம் கொட்டி
பூவைப்போல் எனைத் தாங்கி
என் மடியில் அரவணைத்தாய்!...

குழந்தையாய் நான் இருந்த வேளை
அறிவூட்டும் கதை கூறினாய்
என் கனவில் உனை உதைக்க
அன்போடு அதை ஏற்றாய்!...

உனை நான் தாயாக அடைய
என்ன தவம் செய்தோனோ
ஏழு பிறப்பும் தொடர வேண்டும்
இந்த உறவு அன்புத் தாயே
தாயே நீ வரம் தருவாய்!...

செல்வன் ராஜா
மாணிக்கவாசகர்.

திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

## பேசுங்கள்!...

தாயிடம் அன்பாகப் பேசுங்கள்
தந்தையிடம் பண்பாகப் பேசுங்கள்

ஆசிரியரிடம் அடக்கமாகப் பேசுங்கள்
துணைவியிடம் உண்மையாகப்
பேசுங்கள்

சகோதரனிடம் அளவாகப் பேசுங்கள்
சகோதரியிடம் பாசத்தோடு பேசுங்கள்

குழந்தையிடம் ஆர்வமாகப் பேசுங்கள்
உறவினரிடம் பரிவோடு பேசுங்கள்

நட்புக்களிடம் உரிமையோடு பேசுங்கள்
அதிகாரிகளிடம் பணிவாகப் பேசுங்கள்

வியாபாரியிடம் கறாராகப் பேசுங்கள்
வாடிக்கையாளரிடம் நேர்மையாகப்
பேசுங்கள்

தொழிலாளர்களிடம் நேயத்துடன்
பேசுங்கள்
இறைவனிடம் மௌனமாகப்
பேசுங்கள்

ஏழைகளிடம் ஆதரவாகப் பேசுங்கள்
இயலாதவர்களிடம் உறுதிபடப்
பேசுங்கள்

பேசுவதற்குமுன் யோசித்துப்
பேசுங்கள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வி!..

வாழ்வை உயர்த்தும் வெற்றிப்படி
எல்லோருக்கும் இது அறிவை
வளர்க்கும் உச்சிப்படி...

### செருப்பு!...

இரத்தம் சிந்தாமலே கல்லும்
முள்ளும் காயப்படுத்தியும் கூட
பொறுமையோடு இருக்கும்
அமைதியான பூ வாசல்படியை
காத்துக்கிடக்கும் நல்ல பூ....

### கோபம்!...

வாழ்க்கையில் கருவறை தொடங்கி
கல்லறை வரையும் தொடரும்
வெய்யிலின் கொடுமையிலும்
விருட்சமாய் வளர்ந்து வந்து
விசாலமாய் விரிந்து நிற்கும்...

### இறப்பு!...

உயிர்களிடத்தில் யாவருக்குமுரியது
உறவுகள் எமக்காய் உருகும்
துன்பகரமான கண்ணீர் நிகழ்வு....

### கவலை!...

கள்ளமில்லா உள்ளமதில்
கயவனாய் ஓடிவந்து
காலமெல்லாம் கலங்க வைத்து
மறக்கமுடியாமல் மனதில் பதியும்...

## மனிதன் மனிதனாக வாழ!...

மிகவும் மதிக்க வேண்டியவர்கள் - தாய், தந்தை

மிகவும் நல்ல நாள் - இன்று

மிகவும் பெரிய வெகுமதி - மன்னிப்பு

மிகவும் வேண்டியது - பணிவு

மிகவும் வேண்டாதது - வெறுப்பு

மிகப்பெரிய தேவை - நம்பிக்கை

மிகக்கொடிய நோய் - பேராசை

மிகவும் இலகுவானது-குற்றம்காணல்

மிகவும் கீழ்த்தரமான விடையம் - பொறாமை

மிகவும் நம்பக்கூடாதது - வதந்தி

மிக ஆபத்தை விளைவிப்பது - அதிகபேச்சு

செய்யக்கூடாதது - நம்பிக்கைத் துரோகம்

செய்யக்கூடியது - உதவி

விலக்கவேண்டியது - சோம்பேறித்தனம்

உயர்வுக்கு வழி - உழைப்பு

நழுவவிடக்கூடாதது - வாய்ப்பு

பிரிக்கக்கூடாதது - நட்பு

திருமதிஜெயாநடேசன்
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் வேர்!..

வெற்றியின் வேரே-வீச்சின் உயர்வே
உழைப்பின் சக்தியொன்று வெற்றிகொண்டது
உழவனவன் ஆற்றல் போல உயர்ந்து நிற்குது
திறமையதன் வெற்றிக்கண்கள் உறங்குவதில்லை
உலகம் அதன் திறமைகளை ஒதுக்குதுவதில்லை
கடலில் வாழும் அலைகள் போல கொந்தளித்தாலும்
கடலில் மீள அலைகள்சேரும் கற்பும் மதிப்பும் தான்
உயிராய் வாழும் நாட்கள் எம்மை உருக்குலைத்தாலும்
உராய்ந்த உளியின் வடிவில் நாங்கள் மின்னும் சிலைகள் தான்
எண்ணம் என்ற உயர்ந்த ஆழி எதிலும் பொக்கிசம்
வண்ணம் போற்றும் வனைதல் தொழில் மின்னும் ஆயுதம்
சின்னச் சிறாரின் சித்திரத்தில் எழுத்தை மதிப்பவர்
பென்னம் பெரிய தமிழின் கடலை பெரிதாய் மதிப்பவர்
சாதனையின் தமிழர் என்ற சான்றைப் பதித்தவர்
ஆக்கும் பணியில் அனைத்தையுமே ஒன்றாய் திரட்டினால்
கேட்கும் வாழ்வின் கேள்வியிது நிஜமாய் போதுமா?
காலம் தாழ்த்தி கண்கள் வாழ்வை கண்டு கொண்டாலும்
கதவு ஒன்று மெல்லத் திறந்த பாதை வெற்றியே
பார்வையது பாமுகத்தில் பட்டுத் தெறிகட்டும்
பாடுபட்டு வாழ்ந்தவரின் பயணச் சான்றினை
பாதுகாத்து வெற்றி சொன்னீர் பாதை சிகரமே.

திருமதி. வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி.

# காதல்!.... புதுப்பொன்மொழிகள்...

கடலில் விழுந்து முத்தெடுப்பாய்
காதலில் வீழந்தால் பிச்சை எடுப்பாய்...

சூரியனைச் சுற்றினால் வெந்து போவீர்கள்
சுடிதாரைச் சுற்றினால் நொந்து போவீர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்துகொள்வோம்.!..

1. பிறந்த குழந்தைக்கு எத்தனை நிறங்கள் தெரியும்.
   2 நிறங்கள் கறுப்பு-வெள்ளை

2. ஒரு மனிதனின் மூளையின் சராசரி நிறை என்ன.
   1.5 கிலோகிராம்

3. உலகிலே தொடருந்து (ரயில்) இல்லாத நாடு எது.
   ஆப்கானிஸ்தான்

4. உலகிலே மிக அழகான துறைமுகம் எது.
   அவுஸ்திரேலியா-சிட்னிதுறைமுகம்

5. உலகப்பிரசித்திபெற்ற தாஜ்மஹால் கட்டிடம் எந்த நதிக்கரையில் உள்ளது.
   யமுனா நதிக்கரையில்

6. தாஜ்மஹாலைக் கட்டிமுடிக்க எத்தனை கலைஞர்கள் பணிபுரிந்தார்கள்.
   22.000 பேர்

7. பிளாஸ்ரிக்கில் முதன்முதலாகச் செய்திகளை வெளியிட்ட நாடு எது.
   இத்தாலி.

8. நரியும் திராட்சையும் என்ற நீதிக்கதையை எழுதியவர் எந்த நாட்டவர்.
   கிரேக்க நாட்டவர்

9. தேநீரை முதன் முதலில் அறிமுகம் செய்த நாடு எது.
   சீனா.

10. உலகின் நிலப்பரப்பில் மிகப்பெரிய நாடு எது.
    ரஷ்ஷியா.

திருமதிஜெயாநடேசன்.
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மண் 166 அட்டைப்படக் கவிதை

முடியாட்சிச் சரித்திரங்கள் மூடிவைத்த நூல்களாய் பரணில்
முதலாளித்துவ நாடுகள் எல்லாம் முண்டாசுகள் கட்டினாலும்
கொடியாட்சி செய்கின்றதேசம் கொள்கையில் ஜனநாயகமும்
கொண்டுவரும் மறுமலர்ச்சியில் கோலோச்சிடும் சுதந்திரமும்
படிப்படியாய் முன்னேறும் பகைமையில்லாப் போட்டிகளும் -புவி
பசுமையாய் மாறிடுதற்கும் பாதுகாத்தபடி வழிசமைத்துவிடும்..!

காற்றினில் பறந்தாடுகின்ற மூன்று கலர்கொடியின் பளபளப்பில்
காற்பந்தாட்ட வெற்றியின் களிப்புமிங்கு கலந்து தெறிக்கிறது
வேற்றுமண்ணாம் பிரேஸிலில் வென்றுவந்த உலகக்கோப்பை
விளையாட்டு வீரரர்களின் வலிமையினை வெளிப்படுத்துகிறது
நோற்றுவந்த நான்காண்டு நோன்பினுக்குக் கிடைத்தபலனும் -கபீபா
நோக்கத்தினை நிறைவேற்றிய நொடிகளும் பெரும்வரலாறாய்..!

அட்சதை தூவியதுபோல் ஆகாயத்திலிருந்து வர்ணத்தூறல்
அலமானியாவின்(ஜேர்மனியின்)வெற்றிக்கு அகிலத்தின்ஆசிகள்
நட்சத்திர அந்தஸ்தினை நான்காய் உயர்த்திக்கொண்டதனால்
நாடெங்கும் கொண்டாடும்படி இந்தநாட்டு அதிபரின் அறிவிப்பு
பட்டொளிவீசுகின்ற படமாய் அமைத்த அட்டையினை -மண்
பாரெங்கும் உலவவிட்டதற்காய் பாராட்டி நாம் மகிழ்ந்திடுவோம்..!

– அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதையும் மனிதமும் மனிதச் சிதையும்!...

கதிர்வரும் காலையினைக் களிப்புடனே நம்பித்தான்
கருமங்கள் யாவும்மண்ணில் களிப்புடனே நிறைவேறும்
சதிராடும் அறிவியலின் சாத்தியமற்ற சோதனையால்
சகத்தினினை உலுக்கிவிடும் சம்பவங்கள் உருவாகும்.!

புலர்வுகள் எல்லாமே பொன்கொளிக்கும் என்பதனாலே
புவியினில் உயிர்களெல்லாம் பூரித்துக் களித்திருக்கும்
உலர்வுகள் கொண்டுவந்து உதிர்த்திடும் செய்திகளால்
உலகினில் அச்சங்கள் உள்ளங்களில் உறைந்துவிடும்.!

முதிர்வினைக் காணாமலும் மூப்பெய்திடா உயிர்களும்
மூடரின் செய்கைளினால் மண்மூடிப்போதல் நீதிதானோ
உதிர்வுகள் என்பனை உரைப்பதற்குத் தகுந்தவனின்
ஊழித்தாண்டவத்தில் ஒருபகுதி இதுவெனக்கொள்வதோ.?

மலர்களாய்க் குவிந்திருக்கும் மகிழ்வுதரும் நிகழ்வுகளில்
மரணங்கள் சூழ்ந்து உயிர் மலிவாகிமண்ணில் மடிவதோ
தளர்வுகள் கண்டிடாத தலைவர்களின் செயல்களினால்
தரணியில் பயங்கரவாதம் தலைவிரித்துத்தான் ஆடுவதோ..?

ஏதிர்வுகள் கூறிவிடுகின்ற ஏகாந்தமான வேளைதனிலும்
"எபோலா" கிருமிகள்பற்றி எண்ணிப்பார்க்க எவருமில்லை
அதிர்வுகள் தந்திடும் ஆபிரிக்கத்தேசச் செய்திகள்வந்து
அகிலத்தை உலுக்கிவிடுவது ஆற்றொணா வேதனையே.!

சிலிர்த்திடும் சம்பவங்களாய் சிதைகின்ற கா(பு)சாவினதும்
சிரியாவினதும் சீற்றத்தைத் தணிக்க சிந்திப்பவர் சிலரேதான்
அலர்ந்திடும் பூமிப்பந்தை அழிவிலிருந்து காத்திடுவதற்கு
அனைவரும் பொறுப்போடு அவசரமாய் செயல்படுவோமே..!

– அம்பலவன்புவனேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்பருத்திப்பூ!...

(செம் பருத்தி பூவே செம் பருத்தி பூவே உள்ளம் கொண்டு போனாய் நினைவு இல்லையா? ) என்ன ஒரு இனிமையான காதல் ரசம் ஊறும் பாடல்.

இதைப் போலவே கண்களுக்கு விருந்தாகவும், எங்களுக்கு மருந்தாகவும் ஊரில் எங்கள் வீட்டு முற்றதிலே பூத்துக் குலுங்கிய அழகிய மலரைப் பல நிறங்களிலும் பல வடிவிலும் காட்சி தந்த செம்பருத்திப் பூவை மறக்க முடியுமா?

செம்பருத்தி பூவை நாம் செவ்வரத்தை என்று சொல்வோம் இலங்கையில், இந்தப் பூ பல சிறந்த மருத்துவ குணங்களை கொண்டதால் இதனை அன்று வாழ்ந்த சித்தர்கள் தங்க புஷ்பம் என்று அழைத்தார்கள்.

இச்செடி கிழக்கு ஆசியாவில்தான் முதல் உற்பத்தியாகிப் பின் ஆசிய நாடுகள் எங்கும் பரவியதாகவும் மலேசியா என்னும் நாட்டின் தேசிய மலராகவும் இன்றுவரை உள்ளது, இந்த மலரை சீன ரோஜா என்றும் அழைக்கபடுகிறது.

செம்பருத்தி மரத்தில் பூ, இலை, வேர் அனைத்துமே மருத்துவ குணம் கொண்டதாகும் மேலை நாடுகளில் இந்தப் பூவை பதப்படுத்தித் தேயிலை போலே விற்கிறார்கள் அதை வாங்கி நாம் சுடு நீரில் போட்டு குடிக்கலாம்.

செம்பருத்திப் பூ பூசைக்கு பயன் படுவதுடன் சமையலுக்கும் உபயோகப் படுத்தப்படுகிறது, செந்நிற செம்பருத்திப் பூக்களை துவையல் செய்து உண்ணலாம், காலையில் நீரில் தேசிக்காய் புளியுடன் ஊற வைத்து மாலை அதனை வடித்து எடுத்து சீனியுடன் கலந்து நன்கு பதமாகக் காய்ச்சி போத்தலில் அடைத்து வைத்துச் சர்பத் போலே குடி பானம் தயாரிக்கலாம்.

செம்பருத்திப் பூ இதய நோய்கள், இரத்தச் சோகை, பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகள், போன்றவற்றை குணபடுதும் என இயற்கை மருதுவம் கூறுகிறது, இப்பூ விற்றமின் நிறைய உள்ள பூ ஆதலால் எமது இரத்தக் கோளாறுகளை போக்க வல்லது.

இந்தத் தாவரத்தின் இலைகளை அரைத்து சம்போ போலே தலைக்குப் பூசிக் குளிக்கலாம், நல்ல அழகான கூந்தல் வளர்வதுடன் பொடுகு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிர் உதிர்தல் போன்ற தொல்லைகள் இதனால் குணபடுத்தப் படுவதாக நம்பபடுகிறது, மேலும் இந்த இலைச்சாறு ஆதி காலத்தில் இனிப்புப் பலகாரம் செய்யும் போது பச்சை நிறம் ஊட்டியாக பயன் படுத்தப்பட்டும் உள்ளது.

வேர் கூட மருதுவ குணம் உள்ளதாக இயற்கை மருதுவர்கள் கூறுகிறார்கள், இந்தத் தாவரத்தை சீனர்களும் மருதுவ குணம் உள்ள தாவரமாகவே கருதுகிறார்கள், இதை இன்று மேலை நாடுகளிலும் உற்பத்தி செய்கிறார்கள் ஆனால் வின்ரர் காலங்களில் நாம் வீட்டுக்குள் வைத்துதான் இத் தாவரத்தை இங்கு வளர்க்க வேண்டும், ஊரிலே வளர்வது போலே இந்தத் தாவரம் இங்கு அவ்வளவு பெரிதாக வளர்வதில்லை அதலால் வீடுகளில் உள்ளே வைக்கக் கூடியதாக உள்ளது.

இதன் பெயர் இங்கு Hibiscus எனபடும் பல நிறங்களிலும், பல வடிவங்களிலும் இந்தப் பூக்கள் காணபட்டாலும் செந்நிறத்தில் ஒற்றை இதழில் காட்சி தரும் பூக்களே மருதுவ குணம் நிறைந்ததாகச் சொல்ல படுகிறது. செம்பருத்தியில் ஒரு இனம் தூங்கு செம்பருத்தி எனப்படும் அது நீண்ட மெல்லிய காம்பில் கீழ் நோக்கி தொங்கும் மேலும் சிவப்பு, மஞ்சள், றோசா, வெள்ளை, ஒறெஞ் எனப் பல நிறங்களில் ஒற்றை இதழாகவும் அடுக்கு இதழாகவும் இப்பூக்கள் காணப்படுகின்றன, மேலை நாடுகளில் நீல நிறத்தில் கூட ஒரு சிறிய பூக்களை பூக்கும் செம்பருத்தி இனத் தாவரம் உள்ளது, காலையிலே மலர்ந்து மாலையிலே வாடினாலும் செம்பருத்திப் பூக்கள் கண்ணைப் பறிக்கும் அழகும், நிறைந்த மருதுவ குணமும் கொண்டதோடு பூசைக்கு விரும்பி ஏற்கப்படும் மலராகப் பயன் தருகிறது.

ஒரு நாள் வாழ்ந்தாலும் பிறருக்கு உதவி செய்யவே இம்மலர்கள் மலர்கின்றன.

கவி மீனா
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலம்போற்றும் அன்னை...

சிவா – ஜேர்மனி

அன்றும், இன்றும், என்றும் அகிலம் போற்றும் பெண்மணியாக அன்னைதிரேசா அவர்கள் திகழ்கிறார் என்றால் அது மிகையாகாது. உலகத்திலே எந்த ஒரு மனிதராலேயோ அல்லது நாம் வணங்கும் கடவுளராலேயோ செய்யமுடியாத அரும்பெரும் பணிகளை இந்த உலகத்துக்குச் செய்துகாட்டிப் புகழ்பூர்த்து மங்காத ஒளியாய் காட்சி தருபவர்த
இந்த அன்னை இந்தப்
பேரன்னை மறைந்து 5
தேதி அதாவது 17 வ
நிறைவுகாண்கின்றன.



26-8-1910 ஆண்டில் வ
நாடான மஸடோனியாவில் ஏழைக்குடும்பத்தில் அவதரித்த அன்னையவள் தனது 18வது வயதிலேயே கன்னியாஸ்திரியாகப் படிப்பதற்கு அயர்லாந்து நாட்டுக்குச் சென்றார். கன்னியாஸ்த்திரி படிப்பை முடித்துத் தன்னை பொதுவாழ்வுக்கு அர்ப்பணித்துக் கொண்ட இவர் தனது 19வது வயதிலேயே இந்தியா சென்று கல்கத்தாவில் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார். கல்கத்தாவில் வாழ்ந்தபோதே அங்குவாழ்ந்த மக்களின் துயர் துடைப்பதற்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தார். தொழுநோயாளிகள், எயிட், காசநோய், முடமானவர்கள், ஏழைகள், தலித்துக்கள், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்ட சிறுவர்கள், குழந்தைகள் மீது அளவில்லாப் பற்றுக்கொண்டு 1931ம் ஆண்டு தனது படிப்பை நிறைவுசெய்து சமூகப்பணிகளை ஆரம்பித்துக்
ண்டார்.

ாது கல்கத்தாவிலே
ா இல்லம்
நிறுவி அங்கு
யாஸ்த்திரிகளை இணைத்து
யாலும், சமூகத்தாலும், ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிரளித்து, இடமளித்து, உணவளித்,து, நோய்தீர்க்க மருந்தளித்து, கல்வியளித்து சமூகத்தில் அவர்களுக்கு மறுவாழ்வளித்து உலகத்திலே யாரும் நினைத்துப் பார்க்கமுடியாத அளவிற்குத் தனது சேவையை 60 வருடங்களுக்கு மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டமை ஒப்பற்ற உலக சாதனையாகவும் மிகச்சிறந்த மனிதநேயப் பணியாளராகவும் தனது வாழ்வை அர்ப்பணித்தமையை இந்த உலகம் அன்றும் இன்றும் என்றும் வாழ்த்தி வணக்கிக் கொண்டிருக்கின்றது.அன்னையின் பணிகள் இந்தியாவில் மட்டுமல்ல உலகின் பல வறியநாடுகளுக்குச் சென்று அங்கும் பாதிக்கப்பட்டு வாழ்வுக்குப் போராடிவரும் மக்களின் துயர்துடைப்பதில் அளப்பரிய பணிகளைச் செய்திருக்கிறார். அங்கும் பல கன்னியாஸ்த்திரிகளை ஒன்றுசேர்த்துப் பல இல்லங்களை நிறுவி, பல உதவி நிதியங்களை நிறுவி அல்லல்படும் மக்களுக்காகவே தன் வாழ்நாளைச் செலவிட்டிருக்கிறார். இன்று உலகில் இவரின் வழிகாட்டலால் அருட்கொடையால் 123 நாடுகளில் 610 சேவை நிலையங்களுடன் சுமார் 4.000 அருட்சகோதரிகள் அவரின் நற்பணிகளை மேற்கொண்டுவருகிறார்கள். சுமார் 300 சகோதர சமூக நிறுவனங்களுடன் இணைவை ஏற்படுத்தி இன்று இந்த நிலையங்களில் சுமார் 10.000 பேர்வரை தங்க வைக்கப்பட்டு பசியாறி, நோய் போக்கி, பிணிதீர்த்து மனிதர்களாக வாழ்வதற்கு அனைவருக்கும் வழிகாட்டிய இந்த அன்னையை உலகம் உள்ளவரை போற்றும் வாழ்த்தி வணங்கும்.

அன்னையின் இந்த மாபெரும் பணிகளுக்காக இந்த உலகம் 1979ம் ஆண்டு சர்வதேச சமாதான நோபல் பரிசு வழங்கிக் கௌரவித்தது. இந்தியநாடு 1972ஆண்டில் நேரு விருதும், 1980 ஆண்டில் பாரதரத்னா விருதும் வழங்கிக் கௌரவித்தது. இவற்றைவிடப் பல நாடுகள் பல பட்டங்களும் வெகுமதியும் அளித்துக் கௌரவித்தன. இந்த அபூர்வ மனிதப் பிறவியை நாம் தெய்வமாக வணங்கவேண்டும். உலகத்தின் உன்னத முதல் மனிதர், தியாகத்தின் சிகரம்,, உலகத்தின் ஒளிவிளக்கு, ஏழைகள், பிற்படுத்தப்பட்டோர், நோயாளிகளின் விடிவெள்ளி. கைவிடப்பட்டோரின் கலங்கரை விளக்கு, அமைதியின் சின்னம், பொதுச்சேவையின் மாமனிதர் இப்படியாக எத்தனையோ புகழ்படைத்த அன்னையவர்கள் மறைந்து (05-09-1997) 17 வருடங்கள் ஓடிவிட்டனவே. ஆகவே அன்னையவர்களின் வாழ்க்கைப் பாடத்தை நாமும் பின்பற்றி இந்த மனித மேம்பாட்டுக்கு நாமும் நம்மாலியன்ற பங்களிப்புக்களைச் செய்தல் வேண்டும். புகழ்படைத்த அன்னையவர்களின்

மனிதநேயப்பணிகளை பின்பற்றி நமது வாழ்நாளில் நாமும் சிறுதுளி செய்துவிடுவோமானால் அதுவே இந்த அன்னைக்கு நாம் செய்யும் காணிக்கையாக அமைந்துவிடும்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மை!....

ஒரு காலத்தில் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதியாக இருந்த "ட்ரூமன்" என்பவர் ஜனாதிபதியானதும் அவர் தாயிடம் ஒருவர் கூறினார் "உங்கள் மகனைக் குறித்து நீங்கள் அதிக அளவில் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்" என்றாராம். அதற்கு அந்தத் தாய் கூறிய பதில்.. 'உண்மைதான்"........அதேவேளை வயலில் உழுது பாடுபடும் என் இரண்டாவது மகன் குறித்தும் அதே அளவு நான் பெருமைப்படுகிறேன்" என்றாராம். இதுதான் தாய்மை என்பதாகும்...

## வலி!...

புகழ்பெற்ற ஆங்கில மகாகவி "மில்டன்" பார்வையற்றவர். அவர் மனைவியோ அழகி. அதைவிட அகங்காரமும் கொண்டவள். மில்டனைக் கடுஞ்சொற்களால் திட்டுபவள். மில்டனின் நண்பர் ஒருவர் அவர் மனைவியைப்பற்றி அவரிடம் கூறுகையில்.. "உமது மனைவி அன்றலர்ந்த ரோஜாப் பூப்போன்றவள்" என்றார். அதற்கு மில்டன் கூறிய பதில் "ரோஜாவின் அழகை ரசிக்கும் பேறற்ற குருடன் நான் ஆனால் அதன் முட்கள் குத்தும் வலியை" தினமும் நான் உணர்கின்றேன் என்றாராம்...

## துணிக்கடைப் பெண்.!...

வானவெளியில் பூமியைச் சுற்றிவந்த முதல் பெண்மணி (1963ம் ஆண்டு) ரஷ்ஷியா நாட்டைச் சேர்ந்த வலன்டீனா-நிக்கோலாயாவ் என்பராவர். விண்கலத்தின் மூலம் பூமியைச்சுற்றியுள்ள 48 கிரகங்களையும் சுற்றிவந்தார். இவர் 2 நாள் 2 மணி 42 செக்கன்களில் 12 லட்சத்து 25 ஆயிரம் மைல்கள் தூரம் பயணம் செய்தார். இந்தப் பெண் அதற்கு முன் அறிவியல் ஆராய்ச்சியாளர் என்று நம்பிவிடவேண்டாம். துணிக்கடையில் வேலைபார்த்த சாதாரண பெண்மணிதான்...

திருமதி. சி. இராஜேஸ்வரி
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிஆனந்தனின் சிந்தனைகள்!...

## சொரணை:-

நெருஞ்சிப்புல் வருகிறவர் போகிறவர் கால்களையெல்லாம் தன் முள்ளினால் குத்திப் புண்ணாக்கிக் கொண்டிருந்தது. "மனிதர்களின் காலைக் குத்தி அவர்களுக்குச் சினத்தை உண்டாக்குகிறாயே பார்...பார்... அவர்கள் என்றோ ஒரு நாள் வேரோடு உன்னைப் பிடுங்கி எங்காவது பயிர்களுக்கு எருவாய்ப் புதைத்துவிடப் போகிறார்கள்" நெருஞ்சி சூடானது. "என்னைக் காலால் மிதித்து வதைக்கிறவர்களை எல்லாம் நான் தாங்கிக்கொள்ள வேண்டுமாக்கும்" நெருஞ்சிப் புல் சொன்னது

"வதைபடுவதை விடப் புதைபடுவது மேல்"

## உய்வு:-

காற்றாடி நாலின் துணையோடு உயர்ந்து..உயர்ந்து வானின் உச்சியில் ஏறியது. "பார்த்தீர்களா........நான் எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன்"... என்று தன் பெருமையைப் பறைசாற்றியது. பழைய வரலாற்றை அடியோடு மறந்தது காற்றாடி. "நூல் இனி எதற்கு" என்று கூறிக்கொண்டே நூலைப் பட்டென்று அது அறுத்துக்கொண்டது. கொஞ்ச நேரத்தில்...... ஊரின் மூலையில் ஒரு முள் மரத்தில் விழுந்து, கிழிந்து, உருக்குலைந்து கிடந்தது காற்றாடி. காற்றாடியின் கதை தெரிந்த முள்ளுமரம் சொன்னது...

"ஏற்றி வைத்தவனை மறக்கிறவன் இறக்கி வைக்கப்படுவான்"

---

# ஊடகவியாளர்களின் பரிதாபம்!...

கடந்த 1992 - 2013 ஆண்டுகாலப் பகுதியில் உலகில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பட்டியல் ஒன்றை சர்வதேச ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1-ஈராக் | - 165 பேர் | 6. சோமாலியா | - 54 பேர் |
| 2-பிலிப்பைன்ஸ் | - 76 " | 7. கொலம்பியா | - 53 " |
| 3-அல்ஜீரியா | - 66 " | 8. சிரியா | - 45 " |
| 4-ரஷ்ஷியா | - 60 " | 9. இந்தியா | - 32 " |
| 5-பாக்கிஸ்தான் | - 56 " | 10. மெக்ஸிக்கோ | - 30 " |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியமுடியாத ஸ்கொட்லாந்து!...

ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து பிரிந்து போவதா வேண்டாமா என்பது குறித்து ஸ்காட்லாந்தில் நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் பிரிவினைக்கு எதிராக 55.42% வாக்குகளும் பிரிவினைக்கு ஆதரவாக 44.58%வாக்குகளும் பதிவாகியிருக்கின்றன. ஸ்காட்லாந்தில் மொத்தமுள்ள 32 உள்ளூராட்சிப் பிரதேசங்களில் அதிகாரப்பூர்வ முடிவுகளும் வெளியாகின.

இறுதி முடிவுகளின்படி ஸ்காட்லாந்த் பிரிட்டனில் இருந்து பிரிந்துசெல்லக்கூடாது என்று 1,914,187 பேரும், ஸ்காட்லாந்து பிரிட்டனில் இருந்துபிரிந்து செல்லவேண்டும் என்று 1,539,920 பேரும் வாக்களித்திருந்தனர். இருதரப்பாருக்கும் இடையில் 3,74,267 வாக்குகள் வித்தியாசம் இருக்கின்றன.

ஒட்டுமொத்த வாக்காளர்களின் முடிவை இனிமேல் பெரிய அளவில் மாற்றியமைக்கவோ,பாதிக்கவோ வாய்ப்பில்லை.காரணம் ஸ்காட்லாந்த் பிரிந்து செல்ல வேண்டும் என்றும் வேண்டாம் என்றும் வாக்களித்திருக்கும் இருதரப்பாருக்கும் இடையிலான இடைவெளி ஹைலாண்ட்உள்ளூராட்சிப் பிரதேசத்தின் ஒட்டுமொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையைவிட அதிகம்.

இந்த தேர்தல் முடிவுகள் குறித்து முன்பு எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகள் தெரிவித்திருந்ததைவிட, பிரிவினையை எதிர்ப்பவர்களின் வாக்கு சதவீதம் சுமார் 3சதவீதம் அதிகரித்திருப்பதை வெளியான இறுதிமுடிவுகள் காட்டுகின்றன. ஸ்காட்லாந்து முழுவதும் நடந்த இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்குப்பதிவில் 84.48 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

ஸ்காட்லாந்தின் வாக்குப்பதிவு வரலாற்றில் மிக அதிக சதவீதவாக்குப்பதிவாக கருதப்படும் இந்த கருத்தெடுப்பில் 3,261 வாக்குகள் செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளன. கருத்தறியும் வாக்கெடுப்பு நடந்து முடிந்த பின்னர் வெளியான நிறுவன எக்ஸிட் வாக்கெடுப்பு ஒன்று பிரிந்து போகவேண்டாம் என்ற தரப்புக்கு 54 சதவீதஆதரவும், சுதந்திரம் கோரும் தரப்புக்கு 46 சதவீத ஆதரவும் இருப்பதாகக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்' சஞ்சிகையின் 25வது ஆண்டு நிறைவு

# சிறுவர் இளையோர் போட்டிகள் - 2015

1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015ம் ஆண்டு தை மாதம் 25வது ஆண்டை நிறைவு செய்கின்றது. மிக்க மகிழ்வு. இந்த வெள்ளி விழாவையொட்டிப் புலம்பெயர்ந்து வாழும் சிறுவர்கள், இளையோர்களிடையே பல போட்டிகளை நடாத்த இருக்கின்றோம். எனவே போட்டிகளில் கலந்துகொண்டு ,பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.......

(A) **6 வயதுவரை:-**

(01-01-2009 தேதிக்குப் பின் பிறந்தவர்கள்)

**ஓவியப்போட்டி:-**

அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படத்திற்கு அழகாக வர்ணம்தீட்டி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(B) **7 - 9 வயதுப்பிரிவு:-**

(31.12.2008--01.01.2006 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

**(1) ஓவியப்போட்டி:-**

அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**(2) உறுப்பெழுத்துப் போட்டி:-**

நீங்கள் விரும்பிய தமிழ்ப்பாடல் ஒன்றைப் 10 -1 2 வரிகளுக்குள் அழகுற எழுதி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(C) **10 - 12 வயதுப்பிரிவு:-**

(31.12.2005--01.01.2003 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

**(1) ஓவியப்போட்டி:-**

நீங்கள் விரும்பிய மிருகம், பறவை, மலர் அல்லது உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும் (DIN A4 தாளில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) உறுப்பெழுத்துப்போட்டி:-
நீங்கள் விரும்பிய ஐந்து திருக்குறள்களையும் அதன் விளக்கத்தையும் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

(D) 13 -15 வயதுப்பிரிவு:-
(31.12.2002--01.01.2000 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)
(1) ஓவியப்போட்டி:-
உங்களுக்குப்பிடித்த அல்லது கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)
(2) கட்டுரைப் போட்டி :-
தமிழ்மொழி, நான் விரும்பும் தொழில், திருக்குறள், தாய்த்திருநாடு இத்தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் இரு பக்கத்தில் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
(3) கவிதைப்போட்டி:-
நீங்கள் விரும்பிய தலைப்பில் 10 -15 வரிகளுக்குஅமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

(E) 16 - 18 வயதுப்பிரிவு.-
(31.12.1999--01.01.1997 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)
(1) ஓவியப்போட்டி.-
உங்களுக்குப்பிடித்த அல்லது உங்கள் கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)
(2) கட்டுரைப்போட்டி:-
கணனியுகம், புலம்பெயர் தமிழ் மாணவர்கள், திருக்குறளின் சிறப்பு, தனிநாயகம் அடிகளார், தாய்நாட்டின் துயர் துடைப்போம் இத்தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் இரண்டு பக்கங்களில் எழுதி ஆனுப்புதல் வேண்டும்.
(3) கவிதைப்போட்டி:-
நீங்கள் விரும்பிய தலைப்பில் 15 - 20 வரிகளுக்கு அமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(F) 19 - 21 வயதுப்பிரிவு:-

(31.12.1996 -- 01.01.1994 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

(1) ஓவியப்போட்டி.-

உங்களுக்குப்பிடித்த அல்லது உங்கள் கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)

(2) கட்டுரைப்போட்டி.-

கணனியுகம், தனிநாயகம் அடிகளார், திருக்குறளின்சிறப்பு, புலம்பெயர் தமிழ் மாணவர்களும் தாயக மாணவர்களும், பெற்றோரும் இளவயதினரும் ஏதாவது ஒரு தலைப்பில் DIN A4 தாளில் மூன்று பக்கங்களில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

(3) கவிதைப்போட்டி.-

நீங்கள் விரும்பிய தலைப்பில் 15 - 20 வரிகளுக்கு அமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

சிறுவர், இளையோருக்கான பொதுவிதிகள்:-

- போட்டிகள் முற்றிலும் இலவசமானது.
- வயது எல்லை சரியாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.
- ஓவியப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் ஒருவர் ஒரு படத்தை மட்டும் வரைந்து வர்ணம் தீட்டி ஆனுப்புதல் வேண்டும்.
- அனைத்துப் பிரிவு ஓவியங்களும் DIN A4 தாளில் மட்டும் வரையப்படுதல் வேண்டும்.
- எழுத்துப்போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் அனைவரும் வெள்ளைத்தாளில் கறுப்பு மைப்பேனாவினால் எழுதுதல் வேண்டும். (சிறப்புமலரில் அப்படியே பதிவாகுவதற்கு)
- கோடுகள் போடப்பட்ட தாள்களில் எழுதுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.
- சிறுவர்கள், இளையோரின் எழுத்தாற்றல்களை மேம்படுத்துவதற்காக கவிதை, கட்டுரை, உறுப்பெழுத்துப்போட்டி அனைத்தும் கையால் எழுதுதல் வேண்டும். கணனியில் பதிவுசெய்து அனுப்புபவர்களின் ஆக்கங்கள் தவிர்க்கப்படும்.
- இன, மத, நிற, மொழி, நாடு, கட்சி, இயக்கம், அரசியல் வேறுபாடுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும். வெற்றியாளர்களுக்குச் சிறந்த பரிசுகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்'சஞ்சிகையின் 25வது ஆண்டு நிறைவு வாசகர் போட்டிகள் - 2015

1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015 தை மாதம் 25வது ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளது. இந்த வெள்ளிவிழாவையொட்டி புலம்பெயர்வாழ் வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆக்கதாரர்கள், படைப்பாளிகளிடையே கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளை நடாத்தவுள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் பங்குகொண்டு பரிசுகளை வென்றிடுங்கள்...

1. **கவிதைப்போட்டி:-**
   நீங்கள் விரும்பிய தலைப்பில் 30 - 40 வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

2. **சிறுகதைப்போட்டி:-**
   விரும்பிய தலைப்பில் எழுதலாம் DIN A4 தாளில் நான்கு பக்கங்களுக்குள் கணனியில் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும் (எழுத்துருபு - பாமினி எழுத்து அளவு 14)

3. **கட்டுரைப்போட்டி:-**
   (1) தமிழர்விடுதலைப்போராட்டம் (2) தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார்
   (3) திருக்குறளும் வாழ்வியலும் (4) புலம்பெயர் வாழ்வியல்
   (5) கணனி உலகம் (6) தமிழ்ப்பெண்களின் இன்றையநிலை
   (7) ஊடகங்களின்பங்கு (8) மண் சஞ்சிகையின் 25 ஆண்டுகள்

ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் நான்கு பக்கங்களுக்குள் கணனியில் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும். (எழுத்துருபு- பாமினி எழுத்து அளவு 14)

**பொதுவிதிகள்:-**

வயதுவேறுபாடு இல்லை. போட்டிகள் இலவசமானது, போட்டிகளுக்கு எழதும் தாள்களில் உங்கள் பெயர், முகவரிகளைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். இன, மத, நிற, மொழி, நாடு, இயக்கம், அரசியல் வேறுபாடுகளை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். முடிவுத்திகதி:-31-12-2014.

தொடர்பு முகவரி:- V.Sivarajah, AmWindhövel 18a, 47249 Duisburg Germany. E.mail v.sivarajah@arcor.de



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்...

ப. பசுபதிராசா – ஜேர்மனி

தனித்தனியே கொட்டும் மழை ஆறாகி ஓடுகின்றது. தனித்தனியே எழும் அலை திரையாகக் கரையைத் தொடுகின்றது. தனித்தனியே பறக்கும் பறவை கூட்டமாகக் கூடிப் பறக்கின்றன. ஆனால் கூட்டாக வாழப்பிறந்த மனிதனோ தன்னை ஏதோ ஒரு வகையில் பிரித்துக் காட்டிப் பெருமை பேசுகின்றான். மற்றவரைவிடத் தானே, தன் இனமோ கொஞ்சம் உயர்ந்தது என்று காட்டும் மனிதனின் மனநோய்க்கு அதிகம் ஆளாகிக் கிடப்பதில் அழிக்கவே முடியாத இனம் தமிழினம். அந்த மனித சாக்கடையில் மாற்றவே முடியாது மணம் வீசும் வேறுபாடுகள் ஆயிரம்.

உலகில் தனக்கொரு பெரிய பெருமை தனித்துவமாக உண்டு என்று மார்தட்டும் இவன் மட்டரகமாகப் பிரிந்து கிடப்பதிலும் ஏன் சந்தோஷம் அடைகின்றான். பேச்சுக்கும் வாழ்வுக்கும் இடையில் பொய்களே புலர்ந்து கொண்டிருப்பதால்தான் விடிவைத் தொலைவு விழுங்கிக்கொண்டதோ. இந்த இனம் மிகச் சின்னச் சின்னப் பிரிவுகளாகி இன்னும் அணு அணுவாகக் சுருங்கிப் போனாலும் அதற்கும் ஒரு நியாயம் பகிர இவனைவிட்டால் வேறு யார் உள்ளனர். இவ்வுலகின் சில சம்பவங்களிலாவது சமூக அக்கறை கருதி ஒன்றுபடவும் உணர்வு கொள்ளவும் இவனால் முடியாவிட்டால் பிறகு எதற்குச் சமூக வாழ்வு, இலக்கிய நோக்கு, அரசியல் போக்கு என்று பிதற்ற வேண்டும்.

நான் பார்த்தது தமிழர்களின் எந்தப் பார்வையும் அவனைப் பெரிதென முன்னிலைப் படுத்தும் வரைதான் அதற்கு முன்னுரிமை. அப்படி அந்த எந்தப் பார்வையையும் போர்வையையும் தமிழன் இலகுவில் ஏற்றுக் கொள்ளவே மாட்டான். எதிரி பெரியவன் அவனால் உலகில் சகல உதவிகளையும் பெறமுடியும். அவர்கள் எம்மைவிடப் பல மடங்கு உயர்ந்தவர்கள். நாம் ஒன்றுபட்டால்கூட வெல்வது அசாத்தியம் என்பதை உணர்ந்தும் அதற்கு உடன்பட்டுக்கொள்ள முடியாமல் ஆயிரமாய்ப் பிரிந்து போராடினான் என்றால் வீழ்ச்சிக்கு இதைவிட வேறு காரணம் ஏதும் தேவையா!.. அந்த வீழ்ச்சிக்குப் பிறகு ஆவது என்னவென்று சிந்தித்தானா!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒருபுறம் இருக்க இந்த ஐரோப்பிய உலகில் வசந்தம் பிறந்துவிட்டால், கலைக்கு, இலக்கியத்துக்கு, ஏன் கல்யாணக் கொண்டாட்டங்களுக்கும் காலம் கனிந்து சுகந்தம் வீசும். அப்படி ஒரு இலக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கும். புத்தக வெளியீட்டு விழாவிலே ஒரு அன்பன் பலரைப் பார்த்துக் கேள்வி ஒன்றை இலகுவாக வீசினார். புத்தக வெளியீடு செய்யும் படைப்பாளி பல அமைப்புக் காரருக்குள் இருப்பவர். ஆயினும் ஒரு சில அமைப்புக்களோடு சேர்ந்து விழாவை நடாத்தினாலும் அவரைக் கை இணைத்துக் கொள்வதில் அந்த அன்பரின் கையும் உயர்ந்து நின்றது என்பது உண்மை. ஆனால் அந்த அன்பன் அவர் சார்ந்துள்ள வேறு அமைப்பொன்றின் மேல் குற்றம் சுமத்தி இப்புத்தக விழாவினைக் கொண்டாடிக் கௌரவப்படுத்தியிருக்க வேண்டியவர்கள் நீங்கள் அல்லவா என்றார் கோபாவேசமாக.

ஆனால் அந்த மாறுபட்ட அமைப்பும் அந்தப்படைப்பாளியிடம் தாம் முன்னெடுத்து நடத்துவதாகக் கோரி இருந்ததை நான் நன்கு அறிவேன். இதில் என்ன ஆச்சரியம் என்றால் தன் நலம் கருதியோ, அல்லது பிறர் நலம் கருதியோ தமிழன் ஒரு சிறிய உதவியைக்கூடச் செய்தாலும் அதை வீதியில் வைத்து விலைபேசித் தனக்கொரு விளம்பரம்தேடும் விபரீத ஆசைதான் அடுத்தவர்கள் மற்றவர்கள் மேல் வைக்கும் அபிலாசைகளைக்கூட ஊதாசீனம் செய்துவிடுவதில் கில்லாடிகள்தான் இவர்கள் என்பது ஊர்ஜிதம் ஆகின்றது.

இந்த உயர்ந்த நாகரீகம் உணர்ந்தும் அன்றாடம் படிப்பினைகளைக்கூட நம்மால் உணரமுடியாமல் நாம் ஊரில் இருந்து கட்டித்தூக்கிக் கொண்டுவந்த கடைச் சரக்கை விற்றுத்தொலைக்க முனைவது நாம்வாழும்வரைதான் என்பது ஞாபகமிருக்கட்டும். இன்னும் இங்கே அகதிகளாக வந்து வாழ்க்கைப்பட்ட நாம் எல்லோருக்குமான இசையை, கதையை, கவிதையை அரங்கேற்றும்போதுகூட அதை ஆதரிப்பதற்கும் அரவணைப்பதற்கும் அந்த அந்த அமைப்பைச் சேர்ந்த ஒரு சிலரைத்தவிர வேறு யாரும் முயல்வது இல்லை என்பது எவ்வளவு பெரிய சாபக்கேடு. மேற்கு உலக நாடுகளில் நாம் வாழ்வைத் தொடங்கி ஒரு கால்நூற்றாண்டு கடந்துவிட்ட பொழுதும் நாளாந்தம் இங்கே அந்நிய மக்களால் எடுத்து நடாத்தப்படும் விளையாட்டு, கலை, இசை,என்பன எல்லா மக்களையும் ஜனரஞ்சகமாகச் சென்றடைந்தும் பொது அறிவிற்கும் மன மறுமலர்ச்சிக்கும் சம்பந்தமற்றுச் சறுக்கிக்கொண்டே இருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, இலக்கியம், ஓவியம் விளையாட்டு என்று எல்லோரையும் சென்றுவிடாத தொடர்புகளை நாம் அறுத்துக் கிடந்தாலும் பொதுப்பணி என்று நேர்மையாக நடந்து கொள்ளப்பல உள்ளங்கள் இங்கே ஆழப்பணியாற்றுகின்றன. அதாவது கண்ணுக்குத் தெரிவதில்லையா!..இங்கே அழகாக நிற்கும் உண்மை என்னவென்றால் சாதி சமயத்தை கண்புலனாக்காமல் மறைத்து வைத்து விளையாடும் சங்கங்களும் ஒரு சம்பிரதாயத்தில் பேதம் தேடும் தலைமைப் போட்டியாளர்களுக்கும் இடையில் அகப்பட்டுக் கிடக்கும் சமூகப்பிரஞ்ஞை என்பதுதான். ஒரு நல்லது செய்கின்றபோதுகூட அதற்கும் பேதம், வேதம் ஓதுகின்றது என்றால் பாவம் மக்கள்தான்..

இன்னொரு குற்றச்சாட்டையும் அவர் மக்கள்மீதும் சமூகஆர்வலர்கள் மீதும் அள்ளிவீசினார். அதாவது இங்கே படைப்பாளிகள் ஆகட்டும் இலக்கியதாரர்கள் ஆகட்டும் தம்மைத் தாமே ஆட்களைத்திரட்டி கௌரவித்துக் கொள்கின்றனர். இன்னும் தொடர்ந்தும்... தொடர்ந்தும் ஒரு சில படைப்பாளிகளே கௌரவிக்கப்படுகின்றனர். இன்னும் இலைமறைகாய்களாக ஐரோப்பிய உலகில் கொட்டிக்கிடக்கும் படைப்பாளிகள் மறக்கப்பட்டிருக்கின்றனர் என்பது இது ஒருவகையில் நியாயம் தழுவும் குற்றச்சாட்டுத்தான். ஆனால் அந்த அன்பரைக் கௌரவப்படுத்துவதற்கும் அவர் சேர்த்து வைத்த பட்டாளம்தான் என்பதை ஏன் மறந்தார். இந்தக் குற்றச்சாட்டை அவரால்கூட மாற்ற முடிந்ததா. எந்த மாற்றத்தைக் கொண்டுவர முனைபவர்கள் அதை வித்தியாசமாக நடத்திக்காட்டினால்தான் பேச்சும் பல்லக்கு ஏறும்.

இன்று இந்த ஐரோப்பா மற்றும் பல்வேறுபட்ட இடங்களில் ஒரு மக்கள் சேவைகருதி உழைத்த பெருமக்கள் கௌரவம் பெறமுடியாமல் இருக்கின்றனர். அவர்கள் சார்ந்த அமைப்புக்கள் கௌரவப்படுத்த முன்வந்தாலும் சாங்கோசப்படுகின்றனர். நல்ல உழைப்புக்குப் பரந்த அங்கீகாரம் இல்லாமல் கவலைப்படுகின்றனர். எழுத்து உலகில் எனக்கு நெருக்கமான அன்பன் பல்வேறுபட்ட திறமைசாலி. இருபத்தைந்துவருடகால எழுத்து உலகவாழ்க்கை. அவன் படைப்புக்களுக்குப் பின்னால் ஆயிரம் ஆயிரம் அபிப்பிராய அன்பர்கள் உண்டு. இருந்தும் என்ன பிரயோசனம். அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி..புறத்திதான். இன்னும் சிலர் தமது சொந்தங்களை இன்னும் தமக்குத்தாமே கௌரவங்களைத் தேடிக்கொள்ளும் அன்பர்களைத்திரட்டி வருடாவருடம் பொன்னாடைச் சிறைக்குள் பூரிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக்கூட்டம் சேர்த்துக் கூடிக்களிப்பதும் பட்டங்களைப் பரிமாறிக்கொள்வதும் அவமானம்தரும் வெகுமானம் என்பதை அவர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இப்படி ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டிருப்பதில் பயனில்லைத்தான். ஆயினும் எழுத்தாளனாக என்னுடைய கருத்தை இச்சமூக அக்கறைக்காய்ப் பதிவு செய்வதில் நான் பயப்படவில்லை.

ஒரு எழுத்தாளனோ வேறு எந்தப் படைப்பாளியோ தன்னைத் தாண்டித் தனது திறமையை சமூகத்திற்காகத் தருவது நல்ல முயற்சி. அது திறமைதான் என்பதை மக்களால் பாராட்ட முடிந்தால் அதுவே மிகப்பெரிய வெற்றி. ஒரு படைப்பாளிக்கு ரசிகன்தரும் கை தட்டலைவிட மிகச்சிறந்த பரிசு வேறு இருக்கமுடியாது. மேடையில் கை தட்டல் வாங்காமல் உயர்ந்த கலைஞன் குறைவே. ஆனால் அப்படி மக்கள் அபிப்பிராயத்தைப் பெறாமல் இப்படிப் பத்துப் புத்தகத்தை உருவாக்கிவிட்டேன் அல்லது நான் அந்நிய பொதுப்பணிக்காக நானே ஒரு புத்தகம் வெளியிட்டுவிடுகின்றேன், என்னைக் கௌரவிக்க எவரும் முன்வரப்போவதில்லை என்ற குறுகிய பார்வை கொஞ்சம் குருட்டுப் பார்வை என்பது என் அபிப்பிராயம். எவன் என் பின்னால் வரவேண்டும் என்று பாரதி கவி யார்த்தான். எவன் எனக்கு விசிறியாகவேண்டும் என்று கம்பன் எழுதினான். நாம் உயிராய் கொண்டாடும் எங்கள் வேதநூலாம் திருக்குறளுக்கு வள்ளுவன் தன் பெயர் இடவில்லை. எத்தனையே கண்காணாத அறிஞர்களின் கூற்றை அடித்துக் கூறுகின்றோமே..ஆக உன் படைப்பில் நியாயம் உண்டு எனில் அது நாட்கள் கடந்தும் நியாயங்களே பேசும். அந்தப் படைப்பை இயற்கையும் கைவிடாது என்பது எனது தாழ்மையான கருத்தாகும்!...

– முற்றும் –

இரவில் சூ ரியன் உதிக்கவில்லை
என்று நீ

கவலைப்படுவாயானால்
நட்சத்திரங்களையும் இழப்பாய்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதம்!...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருமதி சாந்தினி துரையரங்கன்
ஜேர்மனி.

3.தா தெய் தெய் த அடவு 4

1. இதில் நான்கு விதமான அடவுகள் உண்டு.
2. இவ் அடவு செய்யும் போது இடம்விட்டு இடம் அசைந்து(பரந்து) செய்வதால் இவ் அடவினை பரவலடவு என்று அழைப்பர்.
3. நான்கு அடவுகளிற்கும் ஒரே சொற்கட்டு.
4. இவ்வடவும் ஆதி தாளத்தில் அமைக்கப்பட்டுள்ள

தா், தெய், தெய், த, /தித், தெய், / தெய், த, //

| அடவு | பயன்படும் முத்திரை |
|---|---|
| 1வது அடவு- | பதாகம்,கடகாமுகம்,திரிப்பதாகம். |
| 2,4வது அடவுகள்- | கடகாமுகம், அலபத்மம் |
| 3வது அடவு- | டோலம், பதாகம் |

4.குதித்து மெட்டடவு

1.நான்கு அடவுகளும் கால்களை குதித்து மெட்டுவதனால் இது குதித்து மெட்டடவு என அழைக்கப்படுகின்றது.
2. நான்கு அடவும் ஆதி தாளத்திலே அமைந்துள்ளன.

தெய், ஹத், தெய், ஹி, / தெய், ஹத், / தெய், ஹி, //

| அடவு | பயன்படும் முத்திரை |
|---|---|
| 1வது,4வது அடவு- | கடகாமுகம்,அலபத்மம். |
| 2வது அடவு- | கடகாமுகம்,அலபத்மம்,திரிப்பதாகம். |
| 3வது அடவு | கடகாமுகம்,அலபத்மம்,பதாகம். |

5.தெய்யா தெய்யி அடவு

1.இதில் நான்கு வகையான அடவுகள் உண்டு.
2.இதன் சொற்கட்டு தெய்யா தெய்யி என்பதாகும்.
3.இவ் அடவும் ஆதி தாளத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய், யா தெய், யி, / தெய், யா / தெய், யி, //

| அடவு | பயன்படும் முத்திரை |
| --- | --- |
| 1வது,2வது அடவுகள் | பதாகம். |
| 3வது அடவு | கடகாமுகம்,அலபத்மம். |
| 4வது அடவு | அலபத்மம் |

6.தத்தெய் தாம் அடவு 6

1.இவ் அடவில் ஆறுவிதமான அடவுகள் உண்டு.

2.கோர்வையடவு, கூட்டடவு என்றும் இவ்வடவினை அழைப்பார்கள்.

3.ஆதிதாளத்தில் இவ் அடவுகள் அமைந்துள்ளன.

4. 1ம், 2ம், 3ம் அடவுகளின் (தாளத்தின் அளவு) காலப்பிரமாணம் ஆறுதலாகவும், 4ம், 5ம், 6ம் அடவுகளின் காலப்பிரமாணம் வேகமானதாகவும் அமைந்திருக்கும்.

| அடவு | | முத்திரை |
| --- | --- | --- |
| 1வது, 2வதுஅடவுகள் | - | சிகரம், பதாகம், கடகாமுகம், அலபத்மம். |
| 3வது அடவு | - | சிகரம், பதாகம், திரிப்பதாகம் |
| 4வது, 5வது, 6வது அடவுகள் | - | திரிப்பதாகம் |

சொற்கட்டுகளும் தாளமும்.

1ம், 2ம், 3ம் அடவுகள்:-

EPS 0 0

தத்,ளு தெய்,ளு தாம்ளு ளுளு ∴ தித,ளு் தெய்,ளு ∴ தாம்ளு ளுளு ∴∴

4ம், 5ம் அடவுகள்:-

EPS 0

0

தத், தெய் தாம் தித் தெய் தாம்/ தத் தெய் தாம் ;/ தித் தித் தெய்/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6வேது அடவு:-

தத் தெய் தாம் தித் தெய் தாம்/ தத் தெய் தாம்;/ தித் தெய் தாம்//

7.தத் தெய் தாஹா அடவு -4

1.நான்கு வகையான அடவுகள் உண்டு.

2.சொற்கட்டு - தத் தெய் தாஹா தித் தெய் தாஹா என்பதாகும்.

3.கைகளை வீசி செய்வதால் இதனை வீசலடவு என அழைப்பர்.

4.பக்க அடவு, குத்தடவு என்றும் இவ்வடவு அழைக்கப்படுகின்றது.

5.முதலாவது அடவு சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்திலும் மற்றைய மூன்றும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளன.

6.எல்லா அடவுகளிலும் திரிப்பதாக முத்திரையே கையாளப்படுகின்றது.

முதலாவது தத் தெய் தாஹா அடவிற்குரிய தாளம்.

| 0 | / |
|---|---|
| தத், தெய், / | தா ஹா தித், தெய், // |
| தா ஹா / | தத், தெய், தா ஹா // |
| தித், தெய், / | தா ஹா தத், தெய், // |
| தா ஹா / | தித், தெய், தா ஹா // |

2ம், 3ம் 4ம் தத் தெய் தாஹா அடவுகளிற்கு உரிய தாளம்.

0 0

தத் தெய் தா் ஹா;/ தித் தெய்;/ தா் ஹா//

---

# தீபாவளி நல் வாழ்த்துக்கள்!....

**வாசகர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு-141
## (ஆடி - ஆவணி 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோ | டை | கா | ல | ம் | ல | பா |
| வ | டா | லை | வ | மொ | ம் | ரா |
| ல | ட் | டு | ர் | ட் | க | ட் |
| ன் | ப | ண் | பா | டு | கா | டு |
| வ | வு | னி | யா | ரி | லே | ம |
| த | ளா | ம் | கி | கே | கை | ல் |
| ஆ | க | கை | ன | ன் | பு | லி |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck
திருமதி.தர்சிகா.சிவரூபன்ன் - Holland
திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
திருமதி.சக்தி.சிறினிசங்கர் - Mönchengladbach
செல்வி..துசயந்தி.முருகானந்தம் - Kilinochci
திரு.தி.தேவானந்தராசா - Möchengladbach

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்...இவர்களில் பரிசுபெறும் அதிஸ்டசாலி..
திருமதி தர்சிகா.சிவரூபன் - Holland

## கண்!.

கண்ணால் தெரியாத கடவுளுக்கு உதவுவதைவிட கண்ணால் தெரியும் ஏழைகளுக்கும், இலயாதவர்க்கும் உதவுவதே மனிதனின் முதல்கடமையாகும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி -142
## (புரட்டாதி - ஐப்பசி 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-06 அகிலம் போற்றும் அன்னை

06-07 வீதி ஒத்தசொல்லாக வந்துள்ளது.

08-10 நம் நாட்டின் கற்பகதருவில் கிடைக்கும் இனிப்பானது.

13-14 இதை இழக்கும்போது இனமும் அழிந்துவிடும்.

22-26 சிலர் இப்படியாகப்பேசிக் காரியமாற்றுவார்கள்.

29-31 சிலர் இதைப் பெறுவதற்கு அலைவார்கள்.

வ-இ:-

19-16 சிலர் இப்படியாகச் செயற்பட்டுக் கழுத்தறுப்பார்கள்.

21-19 பெண் ஒருவரின் பெயர்.

35-32 நீதிபதியால் வழங்கப்படும் இது சிலவேளைகளில் தப்பாகியும்விடும்.

40-38 குடும்பத்தில் இவர்கள் புரியும் தப்பால் குடும்பம் சீர்குலைவதும் உண்டு.

46-44 இது சுருங்குதல் பெண்டிற்கு அழகு என்பர்.

கீ-மே:-

32-04 மாதங்களில் ஒன்று.

35-14 பெரிய முட்டையிடும் பறவை இனம்.

46-32 இது இல்லாப் பண்டம் குப்பையிலே என்பர் நம்மவர்கள்.

47-26 இனிப்பான தின்பண்டம் (குழம்பியுள்ளது)

48-34 சிறுவரை இப்படியும் அழைக்கலாம்.

மே-கீ:-

01-43 இலங்கையில் சரித்திரப்பிரசித்திபெற்ற நகர்.

05-19 பிரபல தென்னிந்திய திரைப்பட நடிகை.

20-34 பூ ஒத்த சொல்.

30-44 இலங்கையில் தலதாமாளிகை அமைந்துள்ள நகர்.

35-49 தமிழினத்திற்கு இன்றுவரை சரியான இது கிட்டாதபடியால் அவலங்கள் தொடர்கின்றன.

முடிவுதிகதி: 31.10.2014

1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகிதம் பிறந்தகதை!..

நாம் தினசரி எழுதப் பயன்படுத்தும் காகிதங்கள் எவ்வாறு உருவாகி இருக்கும் என யோசித்தது உண்டா? மனிதன் தன் நினைவாற்றலை தாண்டி சில தகவல்களை சேகரித்து வைக்கவும், மற்றவர்களுடன் பகிரவும் முற்பட்ட போது தான் உருவானவை எழுத்துக்கள். ஆதிமனிதன் முதன்முதல் எழுத்துகளைப் பதித்து வைத்தது கற்களின் மீதுதான்.

அப்படி எழுதப்பட்ட கற்களை, தேவை ஏற்பட்டபோது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட சிரமங்களைத் தொடர்ந்து, விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தடிகளின் மீதும் மனிதன் எழுதத் தொடங்கினான். நாம் இன்று பயன்படுத்திக் கொண்டிருக்கும் பேப்பர்களின் தோற்றத்தைப் போன்ற பொருளில், உலகில் முதன்முதலில் எழுதியவர்கள் எகிப்தியர்தான்.

கி.மு.7–ஆம் நூற்றாண்டில் எகிப்தின் நைல் நதியின் டெல்டா பகுதியில் விளைந்த 2 முதல் 3 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய ஒரு தாவரம் "பாப்பிரஸ்" ஆகும். இந்தப் பாப்பிரஸ் தாவரத்தின் தண்டுப் பகுதியை நுண்ணிய துண்டுகளாக வெட்டி, அதனுடன் நீர் மற்றும் சில தாதுக்களைச் சேர்த்து, பதப்படுத்தி, பின்பு அதனை சூரிய ஒளியில் நன்றாக உலர வைத்து, எழுதுவதற்கென்று பயன்படுத்தினர்.பேப்பர் என்ற சொல்லும் பிறந்தது பாப்பிரஸ் என்ற வார்த்தையில் இருந்து தான்.

இதேவேளை சீனர்களும் விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தடிகளிலும் எழுதி வந்துள்ளனர். கி.மு.206ம் ஆண்டு காலகட்டத்தில் சீனாவின் ஹான் வம்சத்தில் நீதிமன்ற ஆவண காப்பாளராக வேலை பார்த்து வந்தவர் சாய் லூன். எலும்புகளிலும், தடிகளிலும் எழுவதற்கு பதிலாக மாற்று வழியை கண்டுபிடிக்க முற்பட்டார். அப்போது உதயமானது தான் பேப்பர், இதற்காக பல பரிசுகளை வழங்கி அரசாங்கம் கௌரவப்படுத்தியது, ஆனால் பேப்பரின் தடிமன் 5 mm ஆக இருந்தது. சிறிது காலத்திற்கு பிறகு சாய் லூன் ஒரு காட்சியை பார்க்க நேரிட்டது, அதாவது ஒருவகைக் குளவி, மரத்தைத் துளையிட்டு, அதன் மூலம் கிடைத்த சிறு மரத்துகள்களைக் கொண்டு, தனது கூட்டை வலிமையாகக் கட்டிக் கொள்வதைக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான், மரத்தைக் கூழ்மயமாக அரைத்தால், பேப்பரை நாம் விரும்பும் வடிவில் மற்றும் அளவில் தயாரித்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து கொண்டார். இதனையடுத்து பேப்பர் ஆலை நிறுவப்பட்டாலும், சீனர்கள் இந்த நுட்பத்தை யாருக்கும் சொல்லாமல் ரகசியம் காத்து வந்துள்ளனர்.

பின் கி.பி.751ல் நடந்த போரில் அரேபியர்களிடம் சீனா தோற்றுப் போகவே, பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்ட சீனர்களிடம் இருந்து அரேபியர்கள் பேப்பர் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை அறிந்து கொண்டனர். தொடர்ந்து உஸ்பெஸ்கிஸ்தானிலுள்ள மர்கண்ட் என்ற இடத்தில் அதிகாரப்பூர்வமாக பேப்பர் தயாரிக்கும் ஆலை நிறுவப்பட்டது. இந்நுட்பம் மற்ற நாடுகளுக்கும் பரவவே, 1844ஆம் ஆண்டில் சார்லஸ் மற்றும் கெல்லர் ஆகியோர் இணைந்து வெள்ளை நிறப் பேப்பரை உருவாக்கும் தொழில்நுட்பத்தினைக் கண்டறிந்தார்கள்.

## பிளாஸ்ரிக் உலகம்...

உலகில் வருடாவருடம் சுமார் 300 மில்லின் தொன் பிளாஸ்ரிக் வகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சுமார் 1 மில்லியன் தொன் பொருட்கள் கடலில் வீசப்படுகின்றன. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் அழிந்துவருவதுடன் உலக சுற்றுச்சூழலும் மாசடைந்து வருவதாக உலக சுற்றாடல் பாதுகாப்புத் தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தப் பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் பொருட்கள் எவ்வளவு காலம் தண்ணீரில் இருக்கும் என சிறு பட்டியலையும் வெளியிட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பிளாஸ்ரிக் பைகள் | - | 10 - 20 | வருடங்கள் |
| பிளாஸ்ரிக் வாளிகள் | - | 40 - 50 | " |
| கைவேலை றபர் பொருட்கள் | | 40 - 50 | " |
| பம்பஸ் மற்றும் சிறுவர் றபர்பொருட்கள் | | 400 - 450 | " |
| பிளாஸ்ரிக் போத்தல்கள் | | 400 - 450 | " |
| நைலோன் கயிறு வகைகள் | | 550 - 600 | " |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகத்தால் இணைந்த இதயங்கள்!....

நெஞ்சை உருக்கும் காதல் கதை

இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த இளைஞருக்கு பெண் ஒருவர் தனது சிறுநீரகத்தை தானம் செய்ததோடு அவரை காதல் திருமணமும் புரிந்துள்ளது பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா கோழிக்கோட்டை சேர்ந்த ரமீஷ் என்ற இளைஞருக்கு அவரது தாயாருக்கு வந்ததைபோலவே சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ரமீஷின் நண்பர் சதீஷ் என்பவரின் தங்கை சபிதா மருத்துவமனையில் ரமீஷை பார்த்துகொள்ள சென்றுள்ளார்.

அன்று ரமீஷிற்கு கண்களை பரிசோதிக்க அழைத்து சென்றபோது கண்களுக்கு மருந்து ஊற்றப்பட்டதால் சபிதாவின் கையை பிடித்துக்கொண்டு நடந்துள்ளார். பின்னர்கிளம்பும்போது ரமீஷிடம்

தனது கைப்பேசி எண்ணை கொடுத்து சென்றதால், அவ்வப்போது இருவரும் குறுஞ்செய்தி மூலமும், பின்னர் போன் பேசியும் வந்துள்ளனர். மரண பயத்தோடுஇருந்தரமீஷி ற்கு சபிதா நம்பிக்கையூட்டும் வகையில் ஆறுதல் அளித்துள்ளார். இதற்கிடையில் இருவருக்கும் இடையில் நல்ல புரிதலும் காதலும் மலர தொடங்கியுள்ளது. இதை அறிந்துகொண்ட இருவீட்டாரும், அவன் எந்த நிமிடத்திலும் இறந்து போகக்கூடியவன். உன் வாழ்க்கையை பாழாக்கிக்கொள்ளாதே என்று அறிவுறுத்தியுள்ளனர். ஆனால் அதனை பொருட்டாக எடுத்துகொள்ளாத சபிதா அவரை தீவிரமாக காதலித்துள்ளார். பின்னர் ஒருநாள் சபிதா இனி நான் திரும்பி வரமாட்டேன் என்று கூறிவிட்டு வீட்டைவிட்டு சென்றுள்ளார்.

ரமீஷை தொடர்புகொண்டு என்னை தங்களுடன் அழைத்து செல்லுங்கள் என்று தெரிவித்துள்ளார். உடலும் சரியில்லாமல், மனதும் சரியில்லாத நேரத்தில் கையில் இருந்த வெறும் 50 ரூபாயுடன் ரமீஷ் செய்வதறியாது இருந்துள்ளார்.ஆனால் இறுதியில் அவர்கள் இருவரும் தலைமறைவாகியுள்ளனர். கோவிலுக்கு சென்று மாலைமாற்றிவிட்டு, பதிவு அலுவலகத்தில் போய் திருமணத்தை பதிவு செய்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ரமீஷின் மருத்துவ பரிசோதனையில், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைதான் ஒரே வழி ஆனால் அதையும் உடனே செய்யவேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து சபிதா தனது சிறுநீரகத்தை வழங்க முன்வந்தபோதும், அறுவை சிகிச்சை செய்ய பணம் இல்லாததால் செய்வதறியாது திகைத்துள்ளார்.

அந்த நேரத்தில் ராஜேஷ் என்ற மருத்துவர் கருணையோடு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நோயாளிகளின் உறவினர்களிடமும், மருத்துவர்கள் சிலரும் சிறிதளவு பண உதவி செய்ய வெற்றிகரமாக சிகிச்சை முடிந்துள்ளது.மேலும், அறுவைசிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததையடுத்து தற்போது இந்தத் தம்பதி கோழிக்கோட்டில் உள்ள ஒரு பார்மசியில் வேலைபார்த்து வருகின்றனர்.

## சுகாதாரச் செய்திகள்...

- உலகில் 40 விநாடிகளுக்கு ஒருவர் தற்கொலை செய்துகொள்கிறார் எனவும் 15 - 29 வயதினரே அதிகம்பேர் தற்கொலை செய்துகொள்கிறார்கள் எனவும் வறுமை நாடுகளிலேயே மிகக்கூடுதலானோர் தற்கொலை புரிந்துகொள்கிறார்கள் எனவும் உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

- இந்தியாவில் கடந்த 4 வருடங்களில் 40 லட்சம்பேர் புற்றுநோயால் இறந்திருப்பதாகப் புள்ளிவிபரம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

- நைஜீரியா, கொங்கோ குடியரசு, லைபீரியா, சிறாயானோ குவானா நாடுகளை ஆட்டிப்படைக்கும் எபோல வைரஸ் தொற்றுநோயால் 20-09-2014 வரை 2.500 பேர்வரை இறந்துள்ளனர். சுமார் 5.000 பேர்வரை நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய்வாழ!....நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.....

## செரிமானத்தை தூண்டும் பெருஞ்சீரகம்

அஞ்சரைப் பெட்டிக்குள்ளேயே ஆயிரம் மருந்துகள் உண்டு. அந்தளவிற்கு நம் வீட்டு சமையல் அறைகளுக்குள்ளேயே மாபெரும் மருத்துவக் களஞ்சியத்தை வைத்துள்ளனர் நம் முன்னோர்கள். வீட்டுச் சமையலில் வாசனைக்காக பயன்படுத்தப்படும் சோம்பு, தலைசிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது. பெருஞ்சீரகம், வெண்சீரகம் என்று அழைக்கப்படும் சோம்பு வெண்மை நிறத்துடன் சிறிது பச்சை கலந்த நிறமுடையது. இது பூண்டு வகையைச் சார்ந்தது. இலை, வேர் மற்றும் விதைகள் மருத்துவ பயன் கொண்டவை. விதைகளில் இரண்டு வகை உண்டு.
பண்டைய வல்லுநர்கள் இத்தாவரத்தினை பாம்பு கடிக்கு மருந்தாக பயன்படுத்தியுள்ளனர். மத்திய காலங்களில் இதனை சூனிய செயல்களுக்கு எதிரான தாவரமாக பயன்படுத்தியுள்ளனர்

## ரத்தப்போக்கினை கட்டுப்படுத்தும்

கனிகள் வயிற்றுப் பூச்சிகளுக்கு எதிரானது. மணமுள்ளவை. காய்ச்சல் போக்குவி. மார்பு மற்றும் சிறுநீரக நோய்களில் பயனுள்ளவை. சாறு கண்பார்வையை மேம்படுத்தும். இதன் சூடான கசாயம் மாதவிடாய் காலங்களில் ஏற்படும் அதிக இரத்தப் போக்கினை கட்டுப்படுத்துகிறது.
விதைகள் முக்கியமாக வயிற்று வாயு கோளாறுகள், வயிற்று வலி போக்கவும், வலி நீக்கியாகவும், மன ஆறுதல் தரவும் பயன்படுகின்றன.

## குழந்தைகளுக்கு மருந்து

இவற்றின் கசாயம் குழந்தைகளின் வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு, வயிற்று உப்புசம், ஆகியவற்றைப் போக்குகிறது. பல் முளைத்தல் வலியினையும் போக்கும்.
விதைகளின் எண்ணெய், குடல்களின் பிடிப்பு வலியை நீக்குகிறது. பேதி மருந்துகளின் கூடுதல் செயல்பாட்டினால் ஏற்படும் பிடிப்பு வலியினை போக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செரிமானத்தை தூண்டும்....

செரிமான சக்தியைத் தூண்ட எளிதில் செரிமானம் ஆகாத உணவுகளைக் கூட செரிக்கச் செய்யும் தன்மை சோம்பிற்கு உண்டு. உணவுக்குப்பின் சிறிதளவு சோம்பை வாயில் போட்டு மென்று சாறை கொஞ்சம் கொஞ்சமாக இறக்கி வந்தால் உண்ட உணவு எளிதில் சீரணமாகும்.குடல்புண் ஆறசாப்பிட்ட உணவினால் குடலில் அலர்ஜி ஏற்பட்டு வாய்வுக்கள் சீற்றமடைகின்றன. இதனால் குடல் சுவர்கள் பாதிக்கப்பட்டு குடலில் புண்கள் ஏற்படுகின்றன. இந்தப் புண்கள் ஆற சோம்பை தினமும் உணவில் சேர்த்து வந்தால் குடல்புண் நாளடைவில் குணமடையும். வயிற்றுவலி, வயிற்று பொருமல் அஜீரணக் கோளாறுகளால் வயிற்றில் வாய்வுக்களின் சீற்றம் அதிகமாகி வயிற்றுவலி, வயிற்று பொருமல் ஆகியவை ஏற்படுகின்றன. இவர்கள் உடனே சிறிதளவு சோம்பை எடுத்து வாயில் போட்டு மென்று தின்றால் சிறிது நேரத்தில் குணம் தெரியும்.

## கருப்பை பலம்பெற....

கருப்பை பாதிக்கப்பட்டால் கருத்தரிப்பு நடக்காது. இதனால் சிலர் குழந்தை பேறு இல்லாமல் கூட அவஸ்தைப் படுவார்கள். பெருஞ்சீரகத்தை இளம் வறுவலாக வறுத்து பொடித்து,வேளையொன்றுக்கு 2 கிராம் வீதம் தனியாகவோ அல்லது பனங்கற்கண்டு கலந்தோ சாப்பிட்டு வந்தால் கருப்பை சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும் விலகும்.ஈரல் பாதிப்பு நீங்கஉடலின் செயல்பாடுகள் அனைத்திற்கும் முக்கிய காரணியாக இருக்கும் உறுப்பு ஈரல்தான். ஈரல் பாதிக்கப்பட்டால் பித்தம் அதிகமாகி பல நோய்களுக்கு ஆளாக நேரிடும். ஈரல் நோயைக் குணப்படுத்த சோம்பும் ஒரு மருந்தாகப் பயன்படுகிறது. சுரக் காய்ச்சல்அதிக குளிர் சுரம் இருந்தால் சோம்பை நீரில் கொதிக்க வைத்து கொடுத்தால் குளிர் சுரம் கொஞ்சம் கொஞ்சமாக குறையும். இருமல் இரைப்பு மாறநாள்பட்ட வறண்ட இருமல், இரைப்பு இவைகளால் அவதிப்படுபவர்கள் சோம்பை நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி அந்த நீரைப் பருகி வந்தால் நாள்பட்ட இரைப்பு, மூக்கில் நீர் வடிதல் குணமாகும். பசியைத் தூண்டபசியில்லாமல் அவதிப்படுபவர்கள் சோம்பை தனியாக மென்று சாப்பிட்டு வந்தால் நன்கு பசியெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரழிவுநோயைக் கட்டுப்படுத்துங்கள்!..

மருத்துவ செய்தி சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகள்

சர்க்கரை நோய் ஆரம்ப நிலையிலேயே இருக்கும் போது சில வழிகளை கடைபிடிப்பதன் மூலம் எளிதாக தடுக்க முடியும்.

* வாரத்திற்கு 3 நாளாவது குறைந்தபட்சம் 30 நிமிடமாவது கையை வீசி, வேகமாக நடக்க வேண்டும். இதனால் உடலில் சேரும் சர்க்கரை குறையும்.

* சிகரெட் குடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் சிகரெட் குடிப்பதை நிறுத்தி விட வேண்டும்.

* பெரும்பாலானோர் மாலை முதல் இரவு வரை அமர்ந்து டி.வி. பார்க்கின்றனர். இதனால் உடலுக்கு உழைப்பு கிடைப்பதில்லை. அப்போது நொறுக்கு தீனி உண்கின்றனர். இதனால் உடல் எடை அதிகரிப்பதுடன் சர்க்கரை நோய் வருவதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளது.

* நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் எண்ணெய் வகைகள் ரத்தத்தில் சர்க்கரை அளவை கூட்டுகிறது. ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தக்கூடிய, நல்ல கொழுப்பை உருவாக்கக்கூடிய எக்ஸ்ட்ரா வர்ஜின் ஒலிவ் ஓயிலை சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும். அல்லது எதாவதொரு வகையில் தினசரி 5 மில்லி ஒலிவ் ஓயில் உடலில் சேர்க்க வேண்டியது கட்டாயம்.

* அரிசி, சர்க்கரை, உப்பு, மைதா, சாதம், தேங்காய், பால், தயிர் உள்ளிட்ட வெள்ளை உணவு பொருள்களை தவிர்க்க வேண்டும். பேக்கரியில் விற்கும் எல்லா பொருள்களும் சர்க்கரையை கூட்டக்கூடியது. அதையும் தவிர்க்க வேண்டும்.

* மூன்று வேளை சாப்பிடுவதை 5 வேளையாக மாற்றி கொள்ள வேண்டும். 3 வேளை சாப்பிடும் அளவை 5 வேளைகளில் சாப்பிட வேண்டும்.

* தினசரி 25 முதல் 30 கிராம் வெந்தயத்தை உணவின் மூலம் உடலில் சேர்க்க வேண்டும். அது சர்க்கரையின் அளவு கூடாமல் தடுக்கும். வால்நட், பாதாம்பருப்பு கொஞ்சம், நிறைய காய்கறிகள், பப்பாளி, ஆரஞ்சு, ஆப்பிள் ஆகிய பழங்கள் ஆகியவற்றை உணவில் சேர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள்!...

(சிறுகதை)

திருமதிகெங்கா ஸ்ரான்லி
ஜேர்மனி.

முதலியார் வீடு களைகட்டியது. வீடு முழக்க ஒரே ஆரவாரம். சொந்தக்காரர் வந்து கொண்டிருந்தனர்.வீடே விழாக்கோலம் கொண்டிருந்தது. மாலை நேரம் விளக்கு வைக்கும் நேரம் முருகன் மாடுகளைத் தொழுவத்தில் கட்டி வைக்கோலை போட்டு விட்டு தண்ணீரும் வைத்து விட்டு தனது வேலையை முடித்துவிட்டு,முதலியாரிடம் வந்தான்.தனது கூலியைப் பெறுவதற்கு முருகன் வந்து ஐயா எனக்கு கூலிக்காசு தாருங்கள் எனக்கேட்கவும் ரெலிபோன் அடிக்கவும் சரியாக இருந்தது. அவனும் நின்று பார்த்தான்,நன்றாக இருட்டிவிட்டது,இனி இவர் காசு தந்து எப்போ சாமான் வேண்டி பிள்ளைகளுக்கு சமைத்து கொடுப்பது,அவன் கண்களில் கண்ணீர் வந்தது.இதைக் கண்ட முதலியாரின் மனைவி சாப்பாடு கொடுத்து இதை உன் பிள்ளைகளுக்கு கொடுத்து சாப்பிடு என்று சொல்லி அனுப்பினாள்.

முருகன் அந்த சாப்பாட்டுடன் வீட்டிற்கு வந்தான்.அவனுடைய மனைவி பிள்ளைகள் பசிக்களையில் தூங்கிவிட்டார்கள். முருகன் அவர்களை எழுப்பி சாப்பாட்டைக்கொடுக்க அவர்கள் கொஞ்சமாக சாப்பிட்டுவிட்டு விட,மிகுதியை முருகனும் மனைவியும் சாப்பிட்டார்கள். முருகன் மனைவி கேட்டாள் என்னப்பா இன்று முதலியார் பணம் தரவில்லையா? என முருகனும் இல்லை அவர் மகளின் திருமணத்திற்காக ஆலாய்ப் பறக்கிறார்.அடுத்தவன் கஷ்டம் அவருக்கு தெரியவில்லை.என்று கவலையோடு கூறினான்.அப்ப நாளைக்கு தருவாரா? அதுவும் இரவு தானே நீங்கள் வருவீர்கள். அது மட்டும் பிள்ளைகள் பசியோடு இருக்குமே ! என்ன செய்ய எனப் புலம்பினாள்.முதலியார் பெரிய பண்ணை வைத்திருந்தார்,

அங்கே தான் முருகன் வேலை செய்து வருகிறான்.முதலியாரும் ஒழுங்காக அவனுடைய சம்பளத்தை கொடுத்து வந்தார்.இந்நிலையில் அவருடைய மூத்த மகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதினிமித்தம்,ஒரு கிழமை சம்பளம் கொடுக்க அவருக்கு நேரமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனும் நின்று நின்று பார்த்து களைத்துவிட்டான் மனைவியும் இருந்த மளிகைப் பொருட்களை பாவித்து,இன்றுடன் முடிந்துவிட்டது. நாளை ஒரு பருக்கை அரிசியும் இல்லை என்று சொன்னாள். ஆனால் முதலியாருடன்,முருகனால் கதைக்க முடியவில்லை.ஏனெனில் திருமணத்திற்கு 3 நாட்களே இருந்தன.முருகன் வீட்டில் அடுப்பங்கரையில் பூனை துயில் கொள்ள,முத்லியார் வீட்டில் பந்தல் போட்டு பலகாரச் சூடென்ன,பட்டாடை தெரிவென்ன,எல்லாமே அமர்க்களப்பட்டது.

முருகன் வெளி வேலைகளைச் செய்துவிட்டு,அன்றும் முதலியாரிடம் பணம் கேட்க நின்றான், முதலியார் இவனைக் கண்டுகொள்ளவில்லை,உரையாடிக் கொண்டிருந்தார். முதலியாரின் மனைவிதான் முருகனிடம் சாப்பாடு கொடுத்துவிட்டாள். அவளுக்கு இரக்கம் பெண் என்றபடியாலா?முருகனின் வறுமை தெரிந்தபடியாலா? முதலியாரிடம் பணம் வேண்டி,முருகனுக்கு கொடுக்கும் வல்லமை அவளிடம் இல்லை.அந்த உணவைத்தான் கொடுக்கமுடிந்தது.

முதலியாருக்கு முருகனின் வறுமை தெரிந்தும் யோசிக்கவில்லை.மகளின் திருமண சந்தோஷத்தில் அடுத்த நாள் வந்த முருகன் மதியத்துடன் வீடு சென்றுவிட்டான். மூத்த மகள் பசியால் மயங்கி விழுந்ததால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு.ஆனால் அவனது நேரம்வைத்தியசாலையிலும் ஏழைகளுக்கு கவனிப்பு ஏது?பணமின்மையால் அந்த சிறிய உடல் பிரிந்தது.அன்று முருகன் வீட்டில் பிண ஊர்வலம், முதலியார் வீட்டில் மணஊர்வலம்.முருகன் சுடுகாடு சென்று பிள்ளையின் ஈமக்கிரியை முடித்துவிட்டு வீடு திரும்பினான்.முதலியாரும் மகளை கன்னிகாதானம் செய்து மாப்பிள்ளையிடம் ஒப்படைத்தார். மாங்கல்ய நாண் பூட்டி,மாலை மாற்றியதும். மணமகன்,மணமகள் கையைப் பிடித்து கொண்டு மெட்டி அணிய வருகையில்,பக்கத்தில் எரிந்துகொண்டிருந்த குத்துவிளக்கில் மணமகளின் தாவணித்தலைப்பு தீ பிடித்துக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் கவனிக்கவில்லை.உடனே தீ பரவியதால் பட்டுச் சேலை படபடவென பற்றிக்கொண்டது.தீயின் அசுர வேகத்தில் மணமகள் மயங்கி விழுந்துவிட்டார்.அவர்கள் முதலுதவி செய்தும் உடல் கருகி உயிர் பிரிந்துவிட்டது.

திருமணவீடு மரணவீடாகியது. தெத்தம் பண்ணிக்கொடுத்த கை,பந்தம் பிடித்து தீ வைத்தது. முதலியார் ஆறாத துயரத்தில்.இச் செய்தி கேட்டு முருகன் மனம் வருந்தினான்.தன் பிள்ளை பட்டினியால் இறந்தது.இந்தப் பெண் பசுமை நிறைந்தும் இறந்துவிட்டாள்.இது தான் இறைவனின் தீர்ப்பு.

சில நாட்களின் பின் உறவுகள் சென்று விட்டனர்.வீட்டில் மனைவியை தவிர யாருமில்லை, வீடே மயான அமைதியில்.முதலியார் துவண்டுபோனார் உள்ளத்தால். முருகன் வேறு இடத்திற்கு வேலைக்கு போக தொடங்கினான். இனியாவது தனது மனைவி,இரு பிள்ளைகளை பசி,பட்டினி இல்லாது காக்க வேண்டும் என்று. முதலியார் பார்த்தார் முருகன் வேலைக்கு வராதது தெரிந்தது. அப்போ விசாரித்ததில் தான் பணம் கொடுக்காததால் அந்த ஏழையின் மகள் இறந்துவிட்டாள் என்று.கதி கலங்கி விட்டார். தனது தவறை உணர்ந்து முருகன் வீட்டிற்கு சென்று மன்னிப்பு கேட்டார்.அது மட்டுமல்ல தனது மகளின் சொத்தை அந்த ஏழைக்கு கொடுத்தார். அப்போ அவர் மனம் கொஞ்சம் ஆறுதல் அடைந்தது. இதை முதல் செய்திருந்தால் எனது மகளும் பிழைத்திருக்கலாம்.சுய நலங்களால் உணர்ச்சி வசப்பட்டு உடமையையும் இழக்கின்றோம் என உணர்ந்தார். குற்ற உணர்வு குறுகுறுத்துக் கொண்டுதான் இருக்கும் வாழ்நாள் வரைக்கும்...

---

## சீனி!...

ஜேர்மனியில் ஒவ்வொரு குடிமகனும் ஒரு வருடத்தில் சராசரியாக 33 கிலோ சீனியை சாப்பிடுகிறார்கள் என பாவனையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

| | |
|---|---|
| -சொக்கலேட் வகைகள் | - 10 கிலோ |
| -இனிப்பு பாண் வகைகள் | - 07 " |
| -இனிப்பு வகைகள் | - 06 " |
| -ஐஸ்கிறீம் வகைகள் | - 04 " |
| -பிஸ்கட் வகைகள் | - 04 " |
| -கொக்கோ வகைகள் | - 02 " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையில் சாதித்தவர்கள் தரும் நம்பிக்கை!...

தங்களதுகடினஉழைப்பாலும், விடா முயற்சியாலும் இளமையிலேயே பெரும்புகழ் அடைந்து பலருக்கு முன்மாதிரியாக இருக்கும் சிலரைக் குறித்த பதிவு.லியோனல் மெஸ்ஸி (Lionel Messi) கால்பந்து ரசிகர்களுக்கு இவரைக் குறித்த அறிமுகமே தேவையில்லை. அர்ஜென்டினாவை சேர்ந்த 24 வயதே நிரம்பிய கால்பந்து வீரர் இவர்,

16ஆவது வயதிலேயே சர்வதேச கால்பந்து களத்தில் இறங்கியவர்.தற்சமயம் ஸ்பெயினின் பார்சிலோனா "கிளப்"பிற்காக ஆடி வருகிறார். கால்பந்தை கண்ணிமைக்கும் நேரத்தில்கடத்துவதும்,வேகமாக பந்தை முன் நகர்த்துவதும் இவரது பிரத்தியேக திறமை.

இத்தனைக்கும் 11 வயதில் வளர்ச்சிக்குகாரணமான ஹார்மோன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு மருத்துவ செலவுக்குக்கூட வசதியில்லாமலிருந்தவர்.புதிய மரடோனா என்றும்,மெஸ்ஸிடோனா என்ற பட்டப்பெயரும்இவருக்கு உண்டு.மெஸ்ஸி,மரடோனாவுக்கு நிகராக விளையாடுவதை மரடோனாவேஒப்புக்கொண்டுள்ளார்.இருவரும் அர்ஜென்டினாவை சார்ந்தவர்கள் என்பது அர்ஜென்டினருக்கு பெருமை சேர்க்கும் விஷயம்.ஆடுகளத்தில் பிற வீரர்களை போல் கால்களில் கவனம் செலுத்தாமல் கால்பந்தில் மட்டுமே கவனம் செலுத்தும் சாதுவானவர்

ரஃபேல் நடால்(Rafael Nadal) ராஃபா என டென்னிஸ் ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படும் ஸ்பெயினைச் சார்ந்த டென்னிஸ் வீரர்.24 வயதே ஆகியிருக்கும் இவர் தற்பொழுது உலகின் முதல்நிலைடென்னிஸ் வீரர். நான்கரை வருடமாக(2004 முதல் 2008வரை) தரவரிசையில் முதலிடத்திலிருந்த சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை தோற்கடிக்க எவருமே இல்லை என்றிருந்ததைமாற்றி எழுதியதும் இவர் தான்.இந்த வருடம் மட்டும் இதுவரை 4 ஏ.டி.பி மற்றும் ஒரு கிராண்ஸ்லாம் உட்பட 5 பட்டங்களை வென்றுள்ளார். களிமண்தரை மைதானங்களின் மன்னன் (king of clay court) என்று அறியப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடால் களிமண் தரை மைதானமுடைய பிரெஞ்ச் ஓபன் பட்டங்களை 2005 முதல் 2008 வரைதொடர்ந்து நான்கு முறை பெற்றுள்ளார்.இதில் மூன்று வருடம் தொடர்ச்சியாக இவரிடம் தோல்வியடைந்தது பெடரர். புற்தரை மைதானங்களில் அதிகம்சோபிக்காத நடால் கடந்த ஆண்டின் விம்பிள்டன் போட்டியில் ரோஜர் பெடரரைத் தோற்கடித்து அதற்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

ரோஜர் ஃபெடரர் 14 வயதில் சுவிட்சர்லாந்தின் சாம்பியன் ஆனவர் பெடரர்.தற்சமயம் உலக டென்னிஸ் தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருப்பவர். நான்கரைவருடமாக(2004 முதல் 2008வரை) தரவரிசையில் முதலிடத்திலிருந்து சாதனைசெய்தார்.இதுவரை 13 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கிறார். 14 பட்டங்கள் பெற்ற அமெரிக்காவின்பீட் சாம்ப்ராஸின் சாதனையை முறியடிக்க இனி ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டமே எஞ்சியுள்ளது.

சச்சின் டெண்டுல்கர் இந்தியாவில் கிரிக்கெட்டைக் குறித்து அறியாதவர் கூட சச்சினை அறிவர் எனலாம். தனது 16ஆவது வயதிலேயே சர்வதேச ஆட்டங்களில் காலடி எடுத்து வைத்த சச்சின் 25வயதிற்குள்ளாக 16 சதங்களை அடித்து முடித்திருந்தார்.சச்சினின் சாதனைகளை பட்டியலிட இந்த பக்கங்கள் போதாது. அவரின் குறிப்பிடும் படியான சில சாதனைகள் இங்கே.லியாண்டர் பயஸ் 16 ஆவது வயதிலேயே டென்னிஸ் மட்டையை பிடித்தவர். ஒலிம்பிக்கில் டென்னிசிற்காக வெண்கலப் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீரர்.

தனது 17 ஆவது வயதிலேயே லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் ஜூனியர் பட்டம் வென்றவர் அதோடு 1990 ல் உலக ஜூனியர் டென்னிசின் தர வரிசையில் முதலிடமும் பிடித்தார் இதுவரை 8 இரட்டையர் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார் பயஸ்.மகேஷ் பூபதியுடன் 1999 ல் சர்வதேச இரட்டையர் தரவரிசையில் முதலிடம் பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் முதல்வராக ஓ.பன்னீர் செல்வம் அதிகாரபூர்வமாக பதவியேற்பு

தமிழகத்தின் அடுத்த முதல்வராக நிதி அமைச்சராக உள்ள ஓ.பன்னீர்செல்வம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கில் பெங்களூர் தனி நீதிமன்றம் 28-09-2014 அன்று தீர்ப்பளித்தது. இதில், முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் குற்றவாளி என்று தீர்ப்பளித்த நீதிபதி மைக்கேல் குன்ஹா 4 பேருக்கும் 4 ஆண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதித்துள்ளார். இதையடுத்து, முதல்வர் ஜெயலலிதா பதவி இழக்கும் நிலை உருவாகி உள்ளது.

மூத்த அமைச்சரான ஓ.பன்னீர் செல்வத்தை முதல்வராக்கி விட்டு, அவருக்கு உதவியாக ஷீலாவை நியமிக்க ஜெயலலிதா முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா தண்டனை பெற்று பதவியை இழந்ததையடுத்து தற்போது நிதி அமைச்சராக உள்ள ஓ.பன்னீர்செல்வம் அடுத்த முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையிலுள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில், ஓ.பன்னீர்செல்வம் அதிமுகவின் சட்டமன்றக் கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பன்னீர்செல்வம் தலைமையிலான புதிய அரசு 29-09-2014 அன்று பதவி ஏற்றுள்ளது.

இதனையடுத்து பன்னீர்செல்வம், கவர்னரை சந்தித்தார். அவருடன் நத்தம் விஸ்வநாதன், வைத்திலிங்கம், எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட 5 எம். எல்.ஏ.,க்கள் உடன் இருந்தனர்.

இந்த கூட்டத்தில் அதிமுக எம், எல் ஏக்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஓ.பி.பன்னீர்செல்வம் தெரிவித்தார் என செய்திகள் தெரிவித்தனன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடிகளில் யார் 'டாப்' தெரியுமா!...

டென்னிஸ் விளையாட்டில் அதிக வருமானம் ஈட்டியவர்கள் தொடர்பான பட்டியலை போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது.

போர்ப்ஸ் இதழ் இந்தாண்டு அதிகம் பணம் சம்பாதித்த டென்னிஸ் வீரர்கள் குறித்த பட்டியல் ஒன்றை வெளியிட்டது. இதன் படி டாப் 10 வரிசையில் முதலிடத்தை ரெனிஸ வீரர் பெடரர் பிடித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்த ஆண்டு ஜூன் வரையில் பெடரர் ஈட்டியுள்ள மொத்த வருமானம் 56.2 மில்லியன் டொலர் ஆகும். இது இந்திய மதிப்பில் 340 கோடி ரூபாய்.

ஸ்பெயின் நாட்டின் ரபேல் நடால் 44.5 மில்லியன் அமெரிக்க டொலருடன் 2வது இடத்திலும், செர்பியா நாட்டின் நோவக் ஜோகோவிக் 33.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் 3வது இடத்திலும் உள்ளனர்.

அதேபோல், 4வது இடத்தில் 24.4 மில்லியன் அமெரிக்க டொலருடன் மரியா ஷரபோவாவும், சீனாவின் லீ நா 23.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் 5வது இடத்திலும் உள்ளனர்.

டென்னிஸ் போட்டியில் உலக தர வரிசையில் பெண்கள் பிரிவில் முதலிடம் வகிக்கும் செரீனா வில்லியம்ஸ் 22 மில்லியன் அமெரிக்க டொலருடன் 6வது இடத்தைப் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் ஆண்டி முர்ரே 19.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் 7வது இடத்திலும், விக்டோரியா அசரென்கா 11.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் 8வது இடத்திலும் உள்ளனர்.

மேலும், இந்தப் பட்டியலில் ஜப்பானின் கீய் நிஷிகோரி 11 மில்லியன் அமெரிக்க டொலருடன் 9வது இடத்தையும், டென்மார்க் நாட்டின் கரோலின் வோஸ்னியாக்கி 10.8 மில்லியன் அமெரிக்க டொலருடன் 10வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கெடுத்துரைப்போம்!...

(வடபுலத்தான்)

வடபுலத்தான் சில விடயங்களைப் பற்றி அரசியல்வாதிகளிடம் கதைத்தால் அவர்கள் பதில் சொல்கிறார்கள் இல்லை. ஊடகங்களின் தவறுகளைப் பற்றி சுட்டிக்காட்டினால் அவற்றுக்கு பிடிக்குதில்லை.பொலிஸ்காரரின் பொறுப்பின்மையைப் பற்றி சொன்னால் அவர்களுக்கு பிடிக்குதில்லை.அரச அதிகாரிகளின்ர தப்பு தண்டாவைப் பற்றி வெளிப்படுத்தினால் அவர்கள் பழிவாங்கப் பார்க்கின்றார்கள்.

ஆஸ்பத்திரியிலுள்ள குறைபாடுகளைப் பற்றி கதைச்சால் மருந்து எடுக்கவா பார்த்துக்கொள்கின்றேன் என்று சொல்லினம்.

பஸ்ஸில் கொண்டைக்ரரோ, றைவரோ மரியாதைக் குறைவாக நடத்துகினம், மிச்சக் காசையே ஒழுங்காத் தாங்கோ எண்டால் சண்டைக்கு வருகின்றார்கள். பாடசாலைகளின் கல்வித்தரம் போதாதுள்ளது என்றால் பிள்ளையைப் பழிவாங்குகின்றார்கள். இப்பிடியே இந்த நாட்டில் என்னமாதிரியான அநியாயம் நடந்தாலும் வாயைப் பொத்திக்கொண்டு இருக்க வேண்டியதுதான். இல்லையெண்டால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கோணும்.

அதுவுமில்லையெண்டால் காதுகளை இறுகப் பொத்திக்கொள்ள வேணும்.மகாத்மாகாந்தியின் மூன்று குரங்குகளாக நாங்கள் மாறினால்தான் உயிர்வாழலாம் எண்ட நிலைமை உருவாகியிருக்கு. காந்தி சொன்ன அர்த்தம் வேறு, இஞ்ச நாட்டில நடக்குற கதை வேறு, இப்பிடி எதைப் பற்றியும் வாய்திறக்க முடியாத, கண்கொண்டு பார்க்க முடியாத, காதால் கேட்க முடியாத ஒரு கலாசாரம் எங்கட சமூகத்தில வளர்ந்திருக்குதெண்டால் எங்களின்ரை வாழ்க்கையின்ர சிறப்பைப் பற்றி சொல்லத்தேவையில்லை.என்ன மாதிரியான அநீதி நடந்தாலும், அக்கிரமம் நடந்தாலும் அவையெல்லாம் சகித்துக்கொண்டே வாழவேண்டியதுதான்

இண்டைய விதி.மிஞ்சி மிஞ்சிப்போனால் ஏதாவது ஒரு அநியாயத்தைப் பற்றி சுட்டிக்காட்டினால் அல்லது தட்டிக்கேட்டால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுகின்றார்கள். இல்லா விட்டால் பழிவாங்கப்படுகின்றார்கள். எல்லாத்துக்கும் மேலாக அவர்களை துரோகிகள் என்று சிம்பிளாக சொல்லி விடுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக நாட்டில் இப்படியெல்லாம் இருக்கிறது சிறப்பு. படித்தவர்களை அதிகமாகக் கொண்ட தமிழ்ச் சமூகத்தில் பண்பாடு இப்படி கொடிகட்டிப் பறக்கிறது.எல்லா உரிமைகளைப் பற்றியும் பேசுகிற நாங்கள் ஒரு உரிமையையும் மதிச்சு நடக்கிறதாக இல்லை.ஆனால், எங்களுக்கு சுதந்திரம் வேணும், உரிமை வேணும் ஒடுக்குமுறைகளிலிருந்து மீளவேண்டும், எங்களை நாங்களே, ஆழக்கூடிய அதிகாரம் வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கின்றனர் பலர்.சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் பெரிய வேறுபாட்டை வைத்துக்கொண்டு சுதந்திரத்தையும்

பெறமுடியாது,விடுதலையையும் பெறமுடியாது, முன்னேற்றத்தையும் காணமுடியாது, வேணுமெண்டால் சுடுகாட்டுக்குத்தான் செல்லமுடியும்எண்ட படியால்தான் இத்தனை கால போராட்டத்துக்குப் பிறகும் எவ்வளவோ பெரிய தியாகங்களுக்குப் பின்னரும், தமிழ் மக்கள் இன்னும் எதையும் பெறமுடியாமல் பிச்சைக்காரர்களைப் போல் இருக்க வேண்டியிருக்கு. கோமாளிகளைப்போல் பேசவேண்டியும் இருக்கு, இவையெல்லாம் யார்தான் உணருவார். இதையெல்லாம் யாருக்கு எடுத்துரைப்போம்.


Die größte Blume der Welt blüht nur zwei Tage

[illegible] ... zur vollen Pracht – einhergehend mit ihrem intensiven Geruch nach Aas, der Insekten anlocken soll. Bereits am Wochenende begann sie sich schon wieder langsam zu schließen. Experten zufolge wird der Kölner Titanwurz in etwa zwei, drei Jahren erst wieder blühen.

1,90 Meter hoch ist der jetzt aufgeblühte Titanwurz in Köln.

உலகிலேயே மிகப்பெரிய மலராகக் கருதப்படும் இப் பூ ஜேர்மனியில் காணப்படு கின்றது. இதன் உயரம் 190 சென்ரி மீட்டராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா எங்களைக் காப்பற்றுவது யாரப்பா!...

இந்தியாவை நம்புங்கள்!..
முருகா!... மோடியை நம்புங்கள்!....
ஜெயலலிதாவை நம்புங்கள்.!...
கொழும்பை மடக்கப்போகிறம்!....
மகிந்தரை மண்டியிடப்
பண்ணுகிறம்!....
இந்தா வரப்போகுது...தீர்வு.
தமிழீழத்துக்குக் கிட்டவாக உங்களை
(மக்களை) க் கொண்டு போய்
விடப்போறம்.டண்ட டக்கண டண்...
டண்ட டக்கண டண்....வெற்றிமேல்
வெற்றி....அண்ணனுக்கு ஜே... எங்கள்
கூட்டணிக்கு ஜே.....யாழ்ப்பாணத்துப்
பத்திரிகைகள் மீண்டும் ஒருக்கால்....
முருங்கை மரத்தில் ஏறுகின்றன.
மீண்டும் சலிக்காத விக்கிரமாதித்தன்
வேதாளத்துடன்.....கோவிந்தா.....
கோவிந்தா.... அரோகரா....
அரோகரா.....
"உலகத்தின் மகா முட்டாள்களாக
தமிழ்ச்சனங்கள் இருக்கிறார்கள்"
எண்டதை தமிழ்அரசியல்வாதிகளும்
தமிழ் ஊடகங்களில் பலவும்
தமிழ்ப் புத்திஜீவிகளும் வலு
கெட்டித்தனமாகச் செய்து
முடிச்சிருக்கினம்.
இன்னும் ஒரு
தடவை தமிழ்ச்சனங்கள்
ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.
இந்தியா இனப்பிரச்சினைத்தீர்வுக்கு
வழிகாட்டும் எண்டு சுத்தப்
பம்மாத்துப் பண்ணியிருக்கினம்.
தெரியாமல்தான் கேட்கிறேன், இந்தத்
தடவை, மோடி தலைமையில
அல்லது, மோடியின்ரை ஆதரவோட
இலங்கை இனப்பிரச்சினை
தீர்ந்து விடும் என்று நாங்கள்
சத்தியமாக நம்பலாமா? அப்பிடி
நம்பிறதுக்கு என்ன ஆதாரங்கள்
இருக்கு? இந்தியாவின்ரை
மத்தியஸ்துவத்துடன்தான்
பேச்சுவார்த்தை நடக்க வேணும்
எண்டு கூட்டமைப்புக் கேட்டதாகவும்
செய்திகள் சொல்லுகின்றன.அப்பிடி
மத்தியஸ்த்துவத்துக்கு வாய்ப்பில்லை
எண்டால்... இந்தியா பார்வையாளராக,
கண்காணிப்பாளராக இருக்கோணும்
எண்டு இடித்துரைத்திருக்கு
கூட்டமைப்பு எண்டு ஒரு புலுடாச்
செய்தியை யாழ்ப்பாணத்துச்
செத்தவீட்டுச் செய்திகளைக் காவுகிற
பேப்பர் ஒண்டு விட்டிருக்கு. என்ன
மாதிரியான தலையைச் சுத்தி
அடிப்புகள்....என்னமாதிரியான
காதில பூவைக்கிற சங்கதிகள்....
நல்லூர்க்கந்தா..... சன்னிதி
முருகா.... நீங்கள் எல்லாம்
திருவிழாக் கொண்டாட்டத்தில...
எங்கட எம்பி மாரும் மாகாணசபை
உறுப்பினர்களும் கொண்டாட்டத்தில....
சனங்களாகிய நாங்கள்தான்
திண்டாட்டத்தில.
முருகா எங்களைக் காப்பாற்றுறது
யாரப்பா!......

– வடபுலத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் தற்கொலை வீதம் அதிகரிப்பு! பேராசிரியர் தயா சோமசுந்தரம் அறிவிப்பு!!

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலேயே தற்கொலை செய்து கொள்ளும் வீதம் அதிகரித்துள்ளது என யாழ். பல்கலைக்கழக மனநலத் துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்துள்ளார். பேராசிரியர் தயா சோமசுந்தரம் தான் சேகரித்துள்ள புள்ளிவிபரங்களுக்கு அமையவே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அதன்படி போர் முடிவிற்கு முன்னர் அதாவது 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம் பேருக்கு 23 வீதமாக இருந்தது. அதன்பின்னர் போர் ஆரம்பமாகி அது தீவிரமடைந்த போது 2007 ஆம் மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை 20 வீதமாக குறைந்தது. போர் உச்சக்கட்டத்திலும் தமிழ் சமூகம் கடும் அச்சுறுத்தலான நிலைமையில் இருந்த 2009 ஆம் ஆண்டு தற்கொலைகளின் எண்ணிக்கை ஒரு இலட்சம் பேருக்கு 15 வீதமாக குறைந்திருந்தது.

போர் முடிவடைந்து 2011 ஆம் ஆண்டு வரை 25 வீதமாக இந்த தற்கொலைகளின் எண்ணிக்கை உயர்ந்தது. 2012 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 24 வீதத்திலேயே இது காணப்பட்டது. முன்னைய இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்ற காலத்துடன் ஒப்பிடும் போது 2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையான சமாதான காலத்திலும் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

பேரதிர்ச்சி, அழுத்தங்கள் பல்வேறு வகையான தாக்கங்கள் இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளது. யுத்தத்தின் போது ஒரு வலுவான சமூக ஆதரவுக் கட்டமைப்பு இருந்தது. எனினும் தற்போது இலங்கை இராணுவத்தின் முற்றுகையின் கீழ் மக்கள் தாக்கங்களை எதிர்நோக்கியுள்ளனர். அதன்படி போருக்கு பின்னர் குடும்பங்கள் பிரிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பெரும் மன தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன எனவும் தயா சோமசுந்தரம் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேழிக்குமரனுக்குப் பட்டமும் விருதும்!...

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் திருமண மண்டபத்தில் 16.08.2014 சனிக்கிழமை அன்று சர்வதேச இந்து இளைஞர் பேரவையினர் முத்தமிழ் சங்கமம் என்ற இலக்கிய நிகழ்வொன்றை நடாத்தினர். இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக வவுனியாவில் உள்ள பல்துறைசார்ந்த ஆறு அறிஞர்கள் சுடரொளி என்னும் பட்டமும், விருதும் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களின் துறைசார் சிறப்புகள் சபையினருக்கு தெரியப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பல்கலைச்சுடர் தமிழ்மணி.கே.கே. அருந்தவராஜா (மேழிக்குமரன்) அவர்கள் இலக்கியத்துறைசார்ந்து கௌரவிக்கப்பட்டார். மேழிக்குமரன் அவர்களுக்கு, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் மகேஸ்வரன் அவர்கள் 'இலக்கியச்சுடரொளி' என்னும் பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்மணி.திரு.க.அருந்தவராசா அவர்கள் ஜெர்மனியில் 25ஆண்டுகள்வரை நம்மோடு வாழ்ந்தவர். தற்போது வவுனியாவில் வசித்துவருகின்றார். மண் சஞ்சிகையில் பல ஆண்டுகள் எழுதி வந்ததுடன் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர். ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகப் பலவருடங்கள் கடமைபுரிந்து சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பாடுபட்டு உழைத்தவர். ஜேர்மனியில் ஆறு புத்தகங்களை எழுதி ஒரே மேடையில் வெளியீடு செய்து உலக சாதனை படைத்தவர். இவரின் பணியைப் பாராட்டி ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் "பல்கலைச்சுடர்" என்னும் பட்டத்தை 2012ம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தது. மேழிக்குமரன் என்ற புனைபெயரில் உலகப்பரப்பு எங்கும் எழுதிவரும் திரு. அருந்தவராசா அவர்கள் இன்னும் பல்லாயிரம் படைப்புக்களைப் படைக்க மண் சஞ்சிகையினரும் வாழ்த்துகின்றனர்.

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாருதி விருது பெற்ற சிசு..

சுந்தரப் புன்னகையுடன் 93வது அகவையை அகமகிழ்ந்து அவுஸ்திரேலியாவில் வசித்துவருபவரும், மண் சஞ்சிகையின் எழுத்தாளர், வாசகருமான திரு.சிசு.நாகேந்திரன் (சிசு) அவர்களுக்கு சென்ற மாதம் அவுஸ்திரேலியாவில் மாருதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்த வயதிலும் ஞாபக சக்தியை இழக்காமல் உடல் நலத்தையும் பேணி இன்றைய சமுதாயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாளராக இன்றுவரை எழுதிவரும் இவருக்கு மாருதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது மாருதி விருது என்பது மிகப்பெரும் சாதனையாளருக்கு வழங்கப்படும் விருதாகும். இந்தப் பாக்கியம் இவருக்குக் கிடைத்திருப்பது நமக்கும் பெருமையாகவே உள்ளது. இப்பெரியாருக்கு மண் சஞ்சிகையின் வாசகர்களுடன் நாமும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்!..

கபத்மகுணசீலன்.
விஜயலக்சுமி ஞாபகார்த்தகழகம்
கீல்நகர் – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீசில் தமிழனின் சாதனை!...



சுவிஸ் சூரிஷ் நகரை அண்டிய சிலிரனில் வசிக்கும் தமிழ் இளைஞனான சுகந்தன் சோமசுந்தரம் அண்மையில் ஐரோப்பிய ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் சுவிஸ் நாட்டின் சார்பில் 4 X 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பங்குபற்றி, முதல் சுற்றில் (38:56S) 2ம் இடத்தை பெற்றுத் தெரிவாகி இறுதிப் போட்டியில் (38:53 S) 4 வது இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சுகந்தினி தம்பதிகளின் புதல்வனான இவர், தனது 22 வது வயதில் புதிய சாதனையாளர் என்ற பாராட்டைப் பெற்று சுவிஸ் நாட்டின் அனைத்துப் பிரஜைகளின் மனதிலும் இடம் பிடித்துள்ளார்.

மேலும், 100 மீற்றர் ஓட்டத்தை 10:51 செக்கனிலும், 200 மீற்றர் ஓட்டத்தை 21:29 செக்கனிலும் ஓடி தனது இளம் வயதில் சுவிஸ் நாட்டின் சாதனை வீரன் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார். இந்தச் சாதனை வீரனை நாமும் வாழ்த்தி மகிழ்வோம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாணசபை தேர்தல் முடிவுகள்!...

இலங்கையில் நடந்து முடிந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 349906 - ஆசனங்கள் -19 ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக்கொண்டவாக்குகளின் எண்ணிக்கை 274773 - ஆசனங்கள் -13 மக்கள் விடுதலை முன்னணி பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 36580 - ஆசனங்கள் -02 கடந்த 2009ம் ஆண்டு இடம்பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் போனஸ் ஆசனங்கள் உள்ளடங்களாக 25 ஆசனங்களை பெற்றிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, இந்த முறை போனஸ் ஆசனங்களுடன் சேர்ந்து 19 ஆசனங்களை மாத்திரமே பெற்றுள்ளது. அதேநேரம் கடந்த முறை ஏழு ஆசனங்களை மாத்திரமே பெற்றிருந்த ஐக்கிய தேசிய கட்சி இந்த முறை 13 ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. அத்துடன் ஜே வி பியும் இரண்டு ஆசனங்களை பெற்றிருக்கின்றன.

கடந்த தேர்தலில், தனித்து போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த மலையக மக்கள் முன்னணி, இந்த முறை அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டிருந்தமையும், அரசாங்கத்துக்கான வாக்குகள் அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது. இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 4 தமிழர்கள் ஊவா மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த தேர்தலில் 418,906 வாக்குகளைப் பெற்றிருந்த ஆளுந்தரப்பு இம்முறை 349,906 வாக்குகளையே பெற்றிருக்கிறது.

இதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் கடந்த தேர்தல்களை விடவும் இம்முறை வீறுநடை போட்டுப் பிரகாசித்திருப்பதாக அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.2009 தேர்தலில் 129,144 வாக்குகளைப் பெற்றிருந்த ஐ.தே.க இம்முறை 274,773 வாக்குகளைப் பெற்று 145,629 மேலதிக வாக்குகளால் தனது வாக்கு வங்கியை மெருகேற்றிக் கொண்டுள்ளது. அத்துடன் ஐ.தே.க. இம்முறை 07 உறுப்பினர்களை மேலதிகமாகவும் ஈட்டிக்கொண்டுள்ளது. தவிர, கடந்த தேர்தலில் 14,639 வாக்குகளைப் பெற்ற மக்கள் விடுதலை முன்னணி இம்முறை 21,941 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுள்ளது. இம்முறை இரு உறுப்பினர்களோடு அக்கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 36,580 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமரர் அன்னம்மா ஜேம்ஸ் சின்னராசா
## கொய்யாத்தோட்டம் - யாழ்ப்பாணம்
## தோற்றம் 11-05-1928 மறைவு 22-06-2014

ஜேர்மனி-டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவரும், மண் சஞ்சிகையின் நீண்டகால வாசகரும், தற்போது பிரித்தானியாவில் வசித்துவருபவருமான ஜேம்ஸ் அமலதாசன் அவர்களின் தாயார் கடந்த 22-06-2014 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார். அன்னாரின் ஆத்மசாந்திபெற மண் சஞ்சிகையினரும் பிரார்த்திக்கின்றனர்.

அமரத்துவம் அடைந்த அன்னம்மா அவர்களின் நினைவாக அவரது புதல்வன் திரு அமலதாசன் அவர்கள் 150-000 யூரோக்களை தாயகத்தின் ஆதரவற்றோர் நிதிக்காக அன்பளிப்பு வழங்கியுள்ளார். இவருக்கு நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவரது மனிதநேயப் பணிக்காக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்........

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

*76(54), Vidyalayam Road,*
*Trincomalee,*
*Sri Lanka.*
026-2222521

*Regd.No NEP/PCC/C.H/31(1958.05.18)*

76 (54), வித்தியாலயம் வீதி,
திருகோணமலை,
இலங்கை.
026-2222521

பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை -
ஜேர்மனி

திகதி
Date 2014 – 08 – 19.

[illegible]

[illegible]

Miss S.Chithiravel
Attorney-at-Law
Trustee.

Miss V.Nadarajah B.Sc
Manageress & Custodian Trustee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி-சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன -ஜேர்மனி.
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-திருகோணமலை- 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-திருகோணமலை- 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.அம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு -மட்டக்களப்பு)- 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா.தவராஜ் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு-கிளிநொச்சி - 200-00 யூரோ
13. செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.குமரன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு- 200-00 யூரோ
14. செல்வன்.சியாந்த்.எமில்.சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00 யூரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 31.07.2014 +2154-21

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி. ரதி சின்னத்துரை - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. செல்வி. பவித்ரா, செல்வன். விஷ்ணு-விஜயகௌரி - Swiss +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. செல்வி. அஜந்தி. அழகராசா - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. செல்வன். ஜெய்சன். ஜெயபாலன் - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி. பராசக்தி. பரமாமி - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08. செல்வன்.நகுல்.துரையரங்கன் - Essen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09. திருமதி.பிரிந்தாவனி. தனபாலசுந்தரம் - Weeze +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்)
10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
11. செல்விகள். தீபா. தர்மராசா, வினிஷா. ராஜ்குமார், - Gottingen +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
12.செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.கனகராசா - Mönchengladbach +30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு)
13. செல்வி.சுகிர்தா.தவராஜ் - Wadgassen + 30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு)
14. செல்வன்.ஜோய். சியாந்த் .எமில் சர்வானந்தன் - Blieskastel + 30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு) --------

3084-21




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | + 3084-21 |
| 5. திரு.சி.ஏகானந்தராசா- Weeze<br>(பிறந்தநாள் அன்பளிப்பு) | + 25-00 | |
| 16. திருமதி.சக்தி சிறினிசங்கர்-Monchengladbach | + 50-00 | |
| (மகனின் 18வது பிறந்தநாள் அன்பளிப்பு) | | |
| 17. திரு.சாந்தலிங்கம்.சிவகுமாரன்-Pforzheim | + 20-00 | |
| 17. திரு.ஜெம்ஸ் அமலதாசன் -London<br>(தாயாரின் நினைவு அன்பளிப்பு) | + 150-00 | |
| | -------- | |
| | + 245-00 | 245-00 |
| | | -------- |
| | | +3329-21 |

அனுப்பியது:-

| | | |
|---|---|---|
| (1) மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்<br>களுதாவளை-மட்டக்களப்பு | 480-00 | |
| வங்கிக்கட்டணம் | 35-00 | |
| | ------- | |
| | 515-00 | - 515-00 |
| | | --------- |
| 30-09-2014 ல் மீதி கையிருப்பு | | + 2814-21 |
| | | ---------- |



**Sri Shanmuga Girls' Home**

No.

54, Vidyalayam Road,
Trincomalee, Sri Lanka.

23..[illegible]..2014

Received with thanks From [illegible]

the sum of Rupees [illegible]

on account of donation for Home / Celebration / Building fund by cash / Cheque

Rs. 83,577/90 385

Manageress

480 Euro

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATIGE AUSGABE
HTTP://WWW.MANN-ERDE.COM

# ERDE
## Mann

2014
GERMANY
AUSGABE 167









வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org